
## உள்ளே


1. நைலான் கனவுகள் 5

2. வெல்வெட் கில்லர் 92

3. இருட்டில் வைத்த குறி 174


# நைலான் கனவுகள்



## 1

பொதிகை ஹவுசிங் யூனிட் காலனிக்குள் காரை நுழைத்து - 'ஏ' பிளாக்கைத் தேடிக் கண்டுபிடித்து - முப்பத்தியிரண்டாம் நெம்பர் வீட்டுக்கு முன்னால் - இன்ஜினை அணைத்து நிசப்தமாக்கிவிட்டு கீழே இறங்கினாள் தைலா. தோளில் வானிடி பேக். பெரிதாய் ஊஞ்சலாடியது. நடந்தாள்.

சின்னதாய் இருந்த காம்பௌண்ட் கேட்டைத் தள்ளிக்கொண்டு - உள்ளே போய் - வாசற்படி ஏறி - நிலைப்படியின் நெற்றியில் - பதித்திருந்த காலிங்பெல் பொத்தானைத் தேய்த்தாள். வீட்டுக்குள்ளே கிளிக்கூட்டம் கத்தியது.

அரை நிமிஷ நேரத்திற்குப் பின் கதவு திறக்கப்பட - கதவைத் திறந்த பெண், கண்களில் அகலமாய் மலர்ந்து - ''ஏ... ஏய்...! தைலா... நீயா...? வா.. வா... எப்படியடி... என் வீட்டுக்கெல்லாம் உனக்கு வழி தெரிஞ்சது? டயோட்டா கார் வெச்சிருக்

கிறவங்களையும், பெரிய பெரிய பங்களாக்களில் இருக்கிற வங்களையும் தேடித் தானே உன்னோட கார் போகும். இன்னிக்கு எப்படி என் வீட்டு வாசலுக்கு வந்தது...? ஏதாவது வழி தவறி வந்துட்டியா...? இல்லே...''

தைலா கையமர்த்தினாள்.

''ராஜி! நான் உன் வீட்டுக்குள்ளே வரவா...? இல்ல இப் படியே... திரும்பிப் போகவா...?''

''வாடி...! அதுக்குள்ளே கோபிச்சுட்டியே...'' - தைலாவின் கையைப்பற்றி - உள்ளே இழுத்துக்கொண்டு போனாள் அந்த ராஜி. ஹாலில் இருந்த சோபாவில் உட்கார வைத்துவிட்டு தானும் உட்கார்ந்தாள்.

''என்னடி விசேஷம்...?''

''எனக்குக் கல்யாணம்.''

''அம்மாடி! இன்பத்தின் திறப்புவிழாவா...? எப்போ...?''

''அடுத்த வாரம் புதன்கிழமை...'' - பத்திரிகையை நீட்டி னாள்.

''அஞ்சாம் தேதி?''

''ஆமா...''

''மாப்பிள்ளை யாரு...? பேரு...? ஊரு...? - சகலத்தையும் ஒரே நிமிஷத்துல சொல்லு பார்க்கலாம்...''

''மாப்பிள்ளை பேரு அமுதகுமார். இதே ஊர்தான். ரியல் எஸ்டேட் பிசினஸ்... வயது இருபத்தியாறு. நிறம் செக்கச் செவேல். உயரம் நிச்சயமாய் ஆறடி. சுருண்ட முடி கிராப்பை - வலது பக்கம் வகிடு எடுத்து சீவியிருப்பார். மொத்தத்துல ஒரு நீடில் ஃபேக்டரி... ரெண்டு காண்டேஸா கார், பெசண்ட் நகர்ல பெரிய பங்களா... அப்பா அம்மாவுக்கு ஒரே மகன்... நோ நாத்தனார்... நோ கொழுந்தன்... நோ பிடுங்கல்...''



''அடிச்சேடி பம்பர் பிரைஸ்...''

''கல்யாணத்துக்கு கண்டிப்பா வந்துடணும்... உன் வீட் டுக்காரரையும் கூட்டிகிட்டு...''

''நான் வராமே இருப்பேனா...?''

''உன் வீட்டுக்காரர் எங்கே...?''

''இன்னும் ஆபீஸிலிருந்து திரும்பலை... வர்ற நேரம் தான். ஆமா... என்ன சாப்ட்றே...? காபி கூல்ட்ரிங்...?''

''ஒண்ணும் வேண்டாம் ராஜி...! போன இடத்திலெல்லாம் காபி... டீ... லெமன் சர்பத்னு சாப்பிட்டு... வயித்துக்குள்ளே ஒரு மாதிரி - பஞ்சாப் கலவரம் மாதிரி இம்சையா இருக்கு...''

''நம்ம ஃப்ரண்ட்ஸ்களுக்கெல்லாம் குடுத்திட்டியா...?''

''இன்னிக்கு மத்தியானம்தான் ஆரம்பிச்சேன்... மொதல்ல சோடா புட்டிக் கண்ணாடி கோகிலா வீட்டுக்குப் போனேன். அப்புறம் புவனா... புவனா வீட்டிலிருந்து நேரா எலிவால் ஜடை காஞ்சனா... காஞ்சனா வீட்டிலிருந்து அம்சவேணி... அங்கிருந்து சுடுதண்ணி சுசீலா... சுசீலாகிட்டயிருந்து மகாலட்சுமி... வனஜா, ராஜேஸ்வரி... பத்மலீலா, பிரேமா... மகேஸ்... மகேஸ்கிட்ட உன் வீட்டு அட்ரஸைக் கேட்டேன். சொன்னா...! வந்துட்டேன்...''

''ஏதாவது சாப்பிடேன்...''

''ஒண்ணும் வேண்டாம்...! உன் கூட ஒரு அஞ்சு நிமிஷம் பேசிட்டிருந்தா போதும்...! இப்படி உக்கார்...''

ராஜி உட்கார்ந்தாள்.

''என்ன இப்படி உடம்பு போட்டுட்டே ராஜி...! இடுப்பைச் சுத்தி எவ்வளவு மடிப்பு பார்...''

''நான் என்ன பண்ணட்டும்...? அன்பான கணவர், கை நிறைய சம்பளம். மாமனார் மாமியார்ன்னு எந்த உபத்திர

வமும் இல்லை. சமையல் பண்ணவும், வீட்டு வேலைகளை கவனிச்சுக்கவும் ரெண்டு வேலைக்காரிங்க...! சுகமான மத்தியான தூக்கம். வாரத்துல நாலுநாள் மட்டன், சிக்கன், மீன்...''

''போதுண்டி...! நீ படற சந்தோஷத்துல எனக்கும் உடம்பு வந்துடும் போலிருக்கு... காலையில எந்திரிச்சி வாக்கிங் போ... யாரும் இல்லாத ரோட்ல ஓடு. காலேஜ்ல படிக்கும் போது... எவ்வளவு ஸ்லிம்மா இருந்தே...? ரெண்டே வருஷத்துல பெரிய சைஸ் தலையணை மாதிரி... ஆயிட்டியே...?''

''அவரும் இதையேதான் சொல்றார்...''

''கல்யாணமாகி ஒன்றரை வருஷம் இருக்குமா...?''

''ம்... இருக்கும்...''

''அம்மா' - போஸ்ட்டுக்கு அப்ளை பண்ணலையா...?''

''அவர் இன்னும் ஒரு வருஷம் போகட்டும்ன்னு சொல்றார். ஜாலியா இருக்கணுமாம்...?''

வாசலில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது. ராஜி புன்னகைத் தாள். ''அவர்தான் வர்றார்...''

''எப்பவும் ஆறு மணிக்குத்தான் வருவாரா...?''

''சில சமயம் ஆறரை கூட ஆயிடும்... செல்வராஜபுரத்தி லிருந்து வரணுமே...''

ராஜியின் கணவன் வெங்கடேஷ் - மல்லிகைப்பூ கட்டிய வாழையிலைப் பொட்டலமும், ஸ்வீட் பாக்ஸுமாய் உள்ளே வந்தான். தைலா எழுந்து நின்றாள்.

''என்னங்க... அவ என்னோட காலேஜ் மேட் தைலா. மில் ஓனர் சிவப்பிரகாசத்தோட ஒரே டாட்டர். சகலகலாவல்லி. காலேஜ்ல நடக்கிற எந்தப் போட்டியானாலும் சரி... முதல் பரிசு 'கப்' இவளுக்குத்தான். கப் ஆர்டர் பண்ணும்போதே இவளோட பேரை அதில் 'என்க்ரேவ்' பண்ணிடுவாங்க... புதுக்கவிதை எழுதுவா. கதை எழுதுவா. பரதநாட்டியம் ஆடுவா. சாஸ்திர சங்கீதம் பாடுவா. ரங்கோலி ஆர்ட்ல புலி... அப்புறம்...''



வெங்கடேஷ் தைலாவைப் பார்த்து சிக்கனமாய் புன்னகைத் தான். ''ஹலோ...''

''ஹலோ...''

''ராஜி உங்களைப் பத்தி ஏற்கெனவே சொல்லியிருக்கா...''

''அவ் நிறைய பொய் பேசுவா...''

''என்னங்க... இவளுக்கு கல்யாணம்... எங்க செட்ல, இவதான் கடைசி.''

''கங்கிராட்ஸ்! என்னிக்கு கல்யாணம்?''

''வர்ற அஞ்சாம்தேதி...! நீங்களும் ராஜியும் அவசியம் வரணும்...''

''கண்டிப்பா வர்றோம்...''

''மறந்துடாதீங்க.''

''நோ... நோ... நிச்சயமா வருவோம்.'' - டீபாயின் மேல் வைத்திருந்த வானிடி பேக்கை எடுத்து - தோளில் சரித்துக் கொண்டாள் தைலா. ''ராஜி! நான் கிளம்பறேன்...!''

''ஏண்டி வந்து ஒருவாய் காப்பி கூட சாப்பிடாமே போறே...?''

''வேண்டாம். கல்யாணம் முடிஞ்சு நானும் அவரும் ஒரு நாள் உங்க வீட்டுக்கு வந்து விருந்தே சாப்பிடறோம். போதுமா...?''

''நீ எங்கே வரப்போறே! கழுத்துல தாலி விழுந்ததும் புருஷனைக் கூட்டிட்டு சிம்லா, காஷ்மீர்ன்னு ஹனிமூன் கிளம்பிடுவே...''

"இல்ல... வர்றோம்..."

விடை பெற்றுக் கொண்டு வாசலுக்கு வந்தாள் தைலா. ராஜி பின் தொடர்ந்து கொண்டே கேட்டாள்: "இனி நேரா வீடுதானே...?"

"ஊ... ஹூம்...! ரெஜினா வீட்டுக்குப் போகணும்..."

"அவ வீடு க்யூரியோ கார்டன் அவென்யூவில் இருக்கு... இந்நேரத்துக்கு அந்த ஏரியா 'ஹோ'ன்னு இருக்கும். மழை வேற வர்ற மாதிரி... பயமுறுத்துது. பேசாமே நாளைக்குப் போயிடு..."

"கார் இருக்க என்ன பயம்...? இன்விடேஷனையெல்லாம் இன்னிக்கே குடுத்து முடிச்சுடணும்ங்கிறது... அம்மாவோட ஸ்ட்ரிக்ட் ஆர்டர். நாளையிலிருந்து நான் வீட்டு வாசற் படியைத் தாண்ட முடியாது..." - சொல்லிக் கொண்டே காருக் குள் - போனாள்.

"டிரைவரையாவது கூட்டிகிட்டு வந்திருக்கலாம் இல்லையா...?"

"ஏண்டி... நான்... என்ன... சின்னக் குழந்தையா...? எங்கம்மாவை விட நீ அதிகமா புலம்பறே...? இன்னிக்குத் தான் நான் புதுசா கார் ஓட்றேனா...?"

"சரி... சரி... கிளம்பு..."

"அஞ்சாந் தேதி கல்யாணத்துக்கு அன்னிக்கு வந்து நிக்காதே.. நாலாந் தேதி சாயந்தரமே வீட்டுக்கு வந்துடு..."

"வந்துடறேன்..."

"பை..." - கையை அசைத்துவிட்டு காரைக் கிளப்பினாள் தைலா. பொதிகை குடியிருப்பைத் தாண்டியதும் - வேக மெடுத்தாள்.



கிராஸ்கட் ரோட்டைத் தாண்டி -

லாலி ரோட்டின் சந்திப்புக்கு வந்தபோது - காரின் முன்புற கண்ணாடியில் மழைத்துளி ஒன்று விழுந்து சிந்தியது. ஜன்னல் வழியே குளிர்காற்று முகத்தில் மோதி - மழை பெரிதாக வந்தாலும் வரும் என்று பயமுறுத்தியது.

'ரெஜினா வீட்டுக்கு நாளைக்கு போய்க் கொள்ளலாமா?'

காரின் வேகத்தைக் குறைத்தாள்.

மனசு மாறி மாறி யோசித்தது.

"அம்மா நாளைக்கு விடமாட்டாளே...!"

'ரெஜினாவுக்கு அழைப்பிதழ் கொடுத்துவிட்டால் - இந்த 'டிஸ்ட்ரிப்யூஷன் - வேலை முடிந்துவிடும்...'

'அரைமணி நேரம்தானே...? போய் ரெஜினாவைப் பார்த்து குடுத்துவிட்டு வந்து விடலாம்.'

மனசு தீர்மானமாய் சொல்ல - காரின் வேகத்தை அதிகப்படுத்தினாள். அது விவசாயப் பல்கலைக் கழக கட்டிடத்தை நிமிஷ நேரத்தில் தாண்டியது. காலேஜ் புதூர் போவதற்குள் - மழை சிணுங்க ஆரம்பித்து - வடவள்ளியைத் தொட்டதும் அதிகரித்தது. காற்றோடு சேர்த்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் பண்ணியது.

'இன்னும் ஒரு கிலோ மீட்டர் தூரம்தான். க்யூரியோ கார்டன் அவென்யூ வந்துவிடும்...!' - யோசித்துக் கொண்டே காரின் வைப்பரை இயக்கிவிட்டாள். அது இரண்டு கைகளாலும் சளைக்காமல் - தண்ணீரை வழித்து வழித்துப் போட்டது.

காரின் வேகத்தைக் குறைத்து - ஹெட்லைட் வெளிச்சத்தை அதிகரித்து - ஒரு கிலோ மீட்டர் தூரத்தை விழுங்கி - க்யூரியோ கார்டன் அவென்யூ' - என்று அம்புக்குறி காட்டிய போர்டு ஓரமாய் தெரிந்த - மண் பாதையில் திரும்பினாள்.

மழை, ரோட்டை சொதப்பிக் கொண்டிருந்தது. ஆறரை மணிக்கே கவிய ஆரம்பித்துவிட்ட இருட்டை - காரின் ஹெட் லைட் வெளிச்சம் துரத்த - கார் மண்பாதையில் சிரமமாய் ஊர்ந்து - திருப்பங்களில் திரும்பி - ரெஜினாவின் வீட்டைக் கண்டுபிடித்துக் கொண்டு நின்றது.

ரெஜினாவின் வீட்டுக்குள் வெளிச்சம் தெரிய - தைலா வானிடி பேக்கோடு - காரினின்றும் கீழே இறங்கி - மழையில் நனைந்து கொண்டே போய் வாசற்படி ஏறினாள். காலிங் பெல்லுக்கு வேலை கொடுக்க -

கதவு உடனே திறந்தது.

உள்ளே -

அந்த இளைஞன் பனியன் லுங்கியோடு நின்றிருந்தான்.

''யார் வேணும்...?''

''ரெஜினா இருக்காளா...?''

''அவ டவுனுக்குப் போயிருக்காளே...? நீங்க யாரு...?''

''நான் அவளோட ஃப்ரெண்ட்... பேரு தைலா...''

''உள்ளே வாங்க...! நான் ரெஜினாவோட ப்ரதர் ஆல்பர்ட்.''

''துபாய்ல இருக்கிறதா ரெஜினா சொல்லுவா... அது நீங்கதானா?''

''ஆமா...''

''துபாயிலிருந்து எப்ப வந்தீங்க...?''

''நான் வந்து பத்து நாளாச்சு...! ப்ளீஸ்.. உள்ளே வாங்க... மழையில வேற நனைஞ்சுட்டீங்க போலிருக்கே...''

தைலா உள்ளே வந்தாள். வானிடி பேக்கைப் பிரித்து - ஒரு கல்யாண அழைப்பிதழை உருவி நீட்டினாள்.



''எனக்கு வர்ற அஞ்சாம் தேதி கல்யாணம்.''

''கங்கிராட்ஸ்...''

''ரெஜினா வந்தா சொல்லிக் குடுத்துடுங்க...''

''கல்யாணத்துக்கு ரெஜினா மட்டும்தான் வரணுமா...? நான் வரக்கூடாதா...?''

''தாராளமா வரலாம்... நீங்க வந்தா எனக்கு ரெட்டிப்பு சந்தோஷம்.''

''உட்காருங்களேன்'' - அவன் சோபாவைக் காட்டினான்.

''இல்ல... நான் புறப்படறேன்... அம்மா வீட்ல எனக்காக கவலைப்பட்டுகிட்டு இருப்பாங்க...''

''மழை நிக்கட்டுமே...?''

''இந்த மழை இப்போதைக்கு நிக்கிற மாதிரி தெரியலை! கார்தானே? கிளம்பிப் போயிடுவேன்... ரெஜினா வந்தா சொல்லுங்க...''

''கண்டிப்பா...''

தைலா வெளியே வந்தாள்.

மழை இன்னமும் சீற்றமாய் இருந்தது.

''குடையைக் கொண்டு போங்களேன்... காருக்கு போறதுக் குள்ளே தெப்பலா... நனைஞ்சுடுவீங்க போலிருக்கு...''

''அதெல்லாம் வேண்டாம்...''

- சொன்னவள் வாசற்படி இறங்கி - தேங்கியிருந்த தண்ணீரில் - 'ஜலஜல'வென்று நடந்து - வெறுமனே சாத்தி யிருந்த காம்பௌவுண்ட் கேட்டைத் திறப்பதற்காக அதன் மீது கையை வைத்தவள் -

'கிறீச்ச்ச்'சென்று விநோதமாய் அலறி -

பத்தடி எகிறிப் போய் விழுந்தாள்.

ஆல்பர்ட் வேகமாய் ஓடிவந்தான்.

''தைலா! உங்களுக்கு என்னாச்சு...?'' மழைநீரில் மல்லாந்து விழுந்திருந்தவளை - அவசர அவசரமாய்த் தூக்கினான். அடித்த மின்னல் வெளிச்சத்தில் அவனுடைய பார்வை காம்பௌண்ட் கேட்டின் மீது பாய - அதிர்ந்தான்.

தெருவிளக்கு கம்பத்திலிருந்து - வீட்டுக்கு வரும் மின்சார வயர் ஒன்று அறுந்து தொங்கியபடி - காம்பௌண்ட் கேட்டின் ஓரத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது.

''மை குட்னஸ்!'' - மனசுக்குள் தீனமாய் அலறி - ''இந்தப் பெண்ணுக்கு என்னாச்சுன்னு தெரியலையே?'' - என்று பதைபதைத்துப் போய் அவளை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு உள்ளே போனான்.

சோபாவில் படுக்க வைத்துவிட்டு - அவளுடைய கையைப் பற்றி - உள்ளங்கையில் சூடுபறக்க தேய்த்தான்.

''தைலா... தைலா...'' - கன்னத்தைத் தட்டினான். தைலாவின் தலை பிடிப்பில்லாமல் ஆடியது.

'ஷாக் பலமாய் வாங்கியிருக்கிறாள்.'

'என்ன செய்யலாம்...?'

'இந்த மழையில் - டாக்டரிடம் கொண்டு போவதற்குள் - ஏதாவது ஆகிவிட்டால்...?'

நான்கைந்து நாட்களுக்கு முன்னால் - டி.வி.யில் பார்த்த ஒரு டாகுமெண்டரி படத்தின் ஞாபகம் வந்தது. ஹார்ட் அட்டாக் வந்த ஆசாமிகளுக்கும், மின்சாரம் தாக்கிய நபர்களுக்கும் எந்த மாதிரியான முதலுதவிகளைச் செய்தார்கள் என்பது மனத்திரையில் படம் போல் ஓடியது.




இருதயம் நின்று போயிருக்கலாம். உடனே அதை உசுப்ப - ஹார்ட் மசாஜை ஆரம்பிக்க வேண்டும். நுரையீரல்கள் இயங்காமல் இருக்கலாம். பாதிக்கப்பட்டவரின் உதட்டோடு உதடு வைத்து - காற்றை உட்செலுத்தி - சுவாசத்தை உண்டாக்கலாம்... இந்த முதலுதவிகளை விடாமல் ஒரு ஐந்து நிமிஷ நேரத்திற்கு செய்ய வேண்டும்.

ஆல்பர்ட் அந்த முதலுதவி சிகிச்சைகளை ஆரம்பித்தான்.

அவன் சிகிச்சையை ஆரம்பித்த இரண்டாவது நிமிஷம் -

மின்சாரம் எல்லா திசைகளிலும் அணைந்து போயிற்று. வெளியே மழையின் வேகம் இன்னமும் கூடியிருந்தது.



## 2

''டேய்... அமுதகுமார்...! இந்த மழையில எங்கடா கிளம்பிட்டே...?'' - ஹால் சோபாவில் உட்கார்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த தேவகி - மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த மகனைப் பார்த்து விட்டுக் கேட்டாள்.

''ஹோட்டல் சூர்யா இண்டர்நேஷனலுக்கு...''

''ஹோட்டலுக்கா...? எதுக்குடா...?''

''அம்மா! அடுத்தவாரம் என்னோட கல்யாணம். என்னோட ஃப்ரண்ட்ஸ் பார்ட்டி கேட்டாங்க... அதை குடுக்கத்தான் போயிட்டிருக்கேன்...''

''கல்யாணத்துலதான்... டீ பார்ட்டி வைக்கப் போறோமே... அப்புறமும்... என்னடா பார்ட்டி...?

அமுதகுமாரின் அப்பா ராகவமூர்த்தி, பக்கத்து அறையினின்றும் வெளிப்பட்டுக் கொண்டே சொன்னார்: "நீ நினைக்கிற மாதிரி அது ஸ்வீட், காரம், காப்பி பார்ட்டியில்லை... தேவகி...?"

"பின்னே...?"

"சோம பான பார்ட்டி..."

"ஏண்டா அப்பா சொல்றது நிஜமா...?"

"நிஜந்தாம்மா! ஆனா நான் குடிக்க மாட்டேன்..."

"டேய்! பொண்ணு பெரிய இடம்... ஐஸ்வர்ய லெட்சுமியே உன்கிட்டே வரப்போறா... கல்யாண நேரத்துல பேரைக் கெடுத்துக்காதே...!"

"பொண்ணோட பெருமையைப் பத்தி பேச ஆரம்பிச்சுட்டியா...? நான் வர்றேன். பசங்க எனக்காக ஹோட்டல்லே காத்திட்டிருப்பாங்க..."

நகர முயன்றவனை, ராகவமூர்த்தி நிறுத்தினார்.

"டேய் அமுது..."

"என்னப்பா...?"

"உன்னோட இன்விடேஷன் டிஸ்ட்ரிபியூஷன் முடிஞ்சுதா...?"

"ரெண்டு நாளைக்கு முன்னாடியே முடிஞ்சுது..."

"சரி... நாளையிலிருந்து... ஒரு ரெண்டு நாள்... என்னோட பழைய நண்பர்கள் சில பேருக்கு இன்விடேஷன் தர்ற வேலையை நீதான் ஏத்துக்கப் போறே..."

"சிட்டிக்குள்ளே தானே...?"

"ஆமா..."



"அப்படின்னா சரி..." - தலையை ஆட்டிவிட்டு வாசலில் நின்றிருந்த காரை நோக்கிப் போனான் அமுதகுமார்.

கார் புறப்பட்டு காம்பௌண்ட் கேட்டைத் தாண்டும் வரை மௌனம் காத்த தேவகியும், ராகவமூர்த்தியும் - பின் கலைத்தார்கள். தேவகி கவலையாய் கணவரை ஏறிட்டாள்.

"என்னங்க..."

"ம்..."

"கல்யாண நாள் நெருங்க நெருங்க எனக்கு கலக்கமா இருக்கு. அமுதகுமாரைப் பத்தின அந்த விஷயம் பொண்ணு வீட்டுக்காரங்களுக்குத் தெரிஞ்சா என்னாகும்...?"

"புலம்ப ஆரம்பிச்சுட்டியா...?"

"புலம்பாமே எப்படிங்க இருக்க முடியும்...?"

"இதோ பார் தேவகி! அமுதகுமாரைப் பத்தின அந்த விஷயம் உனக்கும், எனக்கும் - நம்ம ஃபேமிலி டாக்டர் வீரபாகுவுக்கும், அவரோட டாக்டர் மனைவி தாரா சந்திரிகாவுக்கும் - மட்டும்தான் தெரியும். கடந்த அஞ்சு வருஷ காலமா அமுதகுமார்க்கு தெரியாதபடி - விஷயத்தை பாது காத்து வந்துட்டோம். இனிமே பொண்ணு வீட்டுக்காரங்களுக்குத் தெரியாதபடி பார்த்துக்கிறது தானா பெரிய விஷயம்...?"

"என்ன இருந்தாலும்...?" - ஏதோ பேச முயன்ற தேவகியை டெலிபோன் ஒலித்து குறுக்கிட்டது.

ராகவமூர்த்தி போய் ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ..."

"வணக்கம் சம்மந்தி! நான் சிவப்பிரகாசம் பேசறேன்..."

"வணக்கம்... வணக்கம்..." சற்று உற்சாகித்த ராகவமூர்த்தி, ரிஸீவரின் வாயை இடது - உள்ளங்கையால் இரண்டு

விநாடிகளுக்கு பொத்தி - ''பொண்ணோட அப்பா பேசறார்'' என்று தேவகியிடம் சொல்லிவிட்டு - ரிஸீவரில் தொடர்ந்தார்.

''கல்யாண ஏற்பாடுகளெல்லாம் எப்படிப் போயிட்டிருக்கு...?''

''நல்லபடியா போயிட்டிருக்கு...! நாம ஏற்கெனவே பேசினபடி எல்லாமே சரியா நடக்கும். இந்த ஜானவாச மாப்பிள்ளை ஊர்வலத்துல மட்டும்... ஒரு சின்ன மாறுதல். அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன்.''

''சொல்லுங்க...''

''ஜானவாச ஊர்வலம் எட்டுமணிக்குன்னு முடிவு பண்ணியிருந்தோம். அந்த நேரம் அவ்வளவு சிலாக்கியமா இல்லேன்னு... எங்க வீட்டு ஜோஸியர் இப்ப அபிப்பிராயப் படறார்...''

''சரி எட்டு மணிக்கு வேண்டாம்... இப்ப அவர் எத்தனை மணிக்கு வச்சுக்கலாம்னு சொல்றார்?''

''ஏழு மணிக்கு.''

''அவர் இஷ்டப்படியே வெச்சுக்குவோம்.''

''மாப்பிள்ளைக்கும் இதுல சம்மதம்தானே...?''

''இதெல்லாம் ஒரு பெரிய விஷயமே கிடையாது... நான்... சொல்லிக்கிறேன்! ஆமா... எங்க மருமகப் பொண்ணு என்ன பண்ணிட்டிருக்கா?''

''தன்னோட ஃப்ரண்ட்ஸ்களுக்கு இன்விடேஷன் தர்றதுக் காக - காரை எடுத்துக்கிட்டு மத்தியானம் புறப்பட்டு போனா...! இன்னும் வரலை...''

''மழை வேற பெய்ஞ்சிட்டிருக்கு...''

''வந்துருவா... ஸ்நேகிதி வீட்டிலேயே எங்கேயாவது தங்கியிருப்பா...! நான் ரிஸீவரை வைச்சுடட்டுமா...? வேற விஷயம் ஒண்ணுமில்லையே...?'' - மறுமுனையில் சிவப்




பிரகாசம் ரிஸீவரை வைத்துவிட - ராகவமூர்த்தியும் ரிஸீவரை வைத்துவிட்டு - மனைவி தேவகியிடம் திரும்பினார்.

''சம்மந்தி ரொம்பவும் நல்ல மாதிரியான டைப்...''

தேவகி பெருமூச்சுவிட்டாள்.

''அப்பேர்ப்பட்டவங்களை ஏமாத்தப் போறதை நினைச்சா மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாயிருக்குங்க...''

''இப்ப... நீ வாயை மூடிக்கிட்டு இருக்கப் போறியா இல்லையா?''



# 3


மின்சாரம் தவறிப்போய் - வீடு இருட்டுக்குள் விழுந் ததும் - கண்ணாடி ஜன்னலின் வழியே - பளீரிட்ட மின்னல் வெளிச்சத்தில் - நைலாவின் ஈர உடம்பு அற்புதமாய் தோன் றியது ஆல்பர்ட்டுக்கு. அவளுடைய உதடுகளில் தன் வெப்ப மான உதடுகளை வைத்து - செயற்கை சுவாசத்தை ஏற்படுத்த - முயன்றபோதும் - இருதயத்தை மஸாஜ் செய்வதற்காக - சேலையின் தலைப்பை விலக்கியபோதும் - அவனுக்குள் ஒரு பிரளயம் நிகழ்ந்தது.

'என்ன அழகான உடம்பு...?' - கண்கள் வியந்து போயிற்று. கைகள் தப்பான இடங்களில் மெதுவாய் ஊர்வலம் நடத் தியது.

'இது தப்பில்லையா...?' - மனசின் ஒரு மூலை பலஹீன மாய் கத்தியதை, ஆல்பர்ட் கண்டுகொள்ளவில்லை. மின்னல் வெளிச்சத்தில் இடுப்பு ஒரு தங்கத்தட்டு மாதிரி தெரிந்து மறைய - உடம்பு முழுக்க தீப்பற்றிக் கொண்டது.

- அவள் மேல் படர்ந்தான்.

ஆழமான மயக்கத்தில் இருந்த - தைலாவிடம் எல்லை மீறினான். வெளியே மழையின் ஆக்ரோஷம் உச்சத்தில் இருந்தது.



4

''இந்தப் பொண்ணு எங்கே போய் மாட்டிகிட்டாள்னு தெரியலையே...?'' - தைலாவின் அம்மாக்காரி சுலோசனா போர்டிகோவின் அருகே நின்று கொண்டு - கையைப் பிசைந்தாள். சிவப்பிரகாசம் ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டு - கொட்டுகிற மழையை வேடிக்கை பார்த்தபடியே சொன்னார்!

''அட! ஏன் இப்படிக் கிடந்து தவிக்கிறே...? உம் பொண்ணு என்ன நடந்தா போயிருக்கா...? கார்லதானே போயிருக்கா...? மழை நிக்கட்டுமேன்னு எந்த சிநேகிதி வீட்டிலாவது உட்கார்ந்திட்டிருப்பா...''

''மத்த நாளா இருந்தா நான் கவலைப்பட மாட்டேங்க...! அடுத்த வாரம் மணையில உட்கார வேண்டிய பொண்ணு. மழையில கிழையில நனைஞ்சு உடம்புக்கு... ஏதாச்சும் வந்துட்டா...''

''ஒண்ணும் வராது...''

''அவ ஃப்ரெண்ட் ராஜேஸ்வரி வீட்டுக்குப் போன் பண்ணிப் பாருங்களேன்.''



''நீயே தான் போன் பண்ணிக் கேளேன்.''

சுலோசனா உள்ளே போய் - டெலிபோன் செய்து விட்டு வந்தாள். ''தைலர் நாலு மணிக்கே ராஜேஸ்வரி வீட்டுக்கு வந்துட்டுப் போயிட்டாளாம்...''

''யார் யார் வீட்டுக்குப் போறேன்னு உங்கிட்டே சொல் லிட்டுப் போனாளா?''

''பொதுவா ஃப்ரண்ட்ஸ் வீட்டுக்கு போறேன்னு சொல் லிட்டுப் போனா...! ம்.. மழை கொட்டறதைப் பார்த்தா... ராத்திரி பூராவும் விடாது போலிருக்கே...''

''கடைசியா யார் வீட்டுக்கு தைலா போனாள்னு தெரிஞ் சாலாவது... காரை எடுத்துகிட்டுப் போலாம்...''

''ரோட்ல ஏதோ... கார் வர்ற சத்தம் கேட்குது...''

காத்திருந்தார்கள்.

கார் ஒன்று ஹெட்லைட் வெளிச்சத்தோடு - காம்பௌண்ட் கேட்டைக் கடந்து போயிற்று. சுலோசனா அருகே இருந்த கூடை நாற்காலியில் - தளர்ந்து போய் 'தொப்'பென்று உட்கார்ந்தாள்.

''என்னங்க...''

''ம்...''

''எனக்கு வயித்தைக் கலக்குது...! உங்க அழகான பொண் ணுக்கு காரை ஓட்டத்தான் தெரியும்... கார் ரிப்பேர் தெரியாது. டயர் பஞ்சரானா ஸ்டெப்னியை மாட்டத் தெரியாது... வண்டி எங்கேயாவது நின்னு போயி...''

உள்ளே ஹாலில் டெலிபோன் அடித்தது.

''அது தைலாதான்... 'பத்திரமா இந்த இடத்துல இருக் கேன்னு... சொல்றதுக்காக' போன் பண்றா போலிருக்கு... போய் ரிஸீவரை எடு...''

சுலோசனா அந்த ஹாலில் வேகமாய் ஓடிப்போய் ரிஸீவரை எடுத்தாள். ''ஹலோ...''

''அம்மா! நாங்க... ஜிப்ஸி சில்க் ஷோ ரூமிலிருந்து பேசறோம்.''

சுலோசனா ஏமாற்றத்தோடு, ''சொல்லுங்க'' - என்றாள்.

''இன்னிக்கு ஏழு மணிக்கு... புதுசா வந்திருக்கிற பட்டு சேலைகளோடு உங்க வீட்டுக்கு வர்றதா சொல்லியிருந் தோம்... ஆனா மழை விடாம பெய்ஞ்சிட்டிருக்கு... நாளைக்கு காலையில பத்து மணிக்கு சேலைகளைக் கொண்டு வரட்டுங் களா...?''

''சரி...'' ரிசீவரை வைத்த சுலோசனா, தன் அருகே வந்து நின்ற கணவரை ஏறிட்டாள். ''ஜவுளிக்கடைக்காரங்க...''

''இந்தப் பொண்ணு எங்கிருந்தாவது ஒரு போன் பண்ணக் கூடாது?''

''அவ உங்க பொண்ணாச்சே...? அந்தப் பொறுப்பும் புத்திசாலித்தனமும் வருமா...?''

''மழை கொஞ்சம் நிக்கட்டும்... தைலா எங்கிருந்தாலும் உடனே புறப்பட்டு வந்துடுவா...''

''வரட்டும்... இனிமே கல்யாணம் முடிகிறவரைக்கும் அவளை வெளியே எங்கேயும் அனுப்பறதில்லை.''

சுலோசனா கோபமாய் கத்திக் கொண்டிருக்கும்போதே - வெளியே மழையின் வேகம் குறைய ஆரம்பித்தது.





## 5

வெறி தணிந்தபின் தான்... ஆல்பர்ட்டுக்கு நிலைமை புரிய ஆரம்பித்தது. தைலா இன்னமும் உணர்வு திரும்பாமல் - வாய் பிளந்து மல்லாந்திருந்தாள். மூச்சு சீராய் வந்து கொண்டிருந்தது.

''ஸாரி... தைலா...! என் நிலைமையில யார் இருந் தாலும்... இந்தப் பாவத்தை தவிர்க்கவே முடியாது...! நான் என்ன செய்தேனோ அதைத்தான் செய்திருப்பாங்க...''

ஆல்பர்ட் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு - ஜன்னலுக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டு - வெளியே பெய்யும் மழையை வேடிக்கை பார்த்தபடி யோசித்தான்.

''இவளை காரில் எடுத்து போட்டுக்கொண்டு... ஏதாவது ஒரு டாக்டரிடம் காட்டி - ட்ரீட்மெண்ட் எடுத்த பின் - நல்ல பிள்ளைத்தனமாய் - வீட்டில் கொண்டு போய் விட்டு விடலாம்...''

''பொறு ஆல்பர்ட்'' - மனசு எச்சரித்தது.

''என்ன?''

''டாக்டரிடம் இவளைக் கொண்டு போவதற்கு முன் - உன்னால் கறைபட்ட இந்த உடம்பை சுத்தம் செய்ய வேண் டும்... இல்லாவிட்டால் தைலாவே தனக்கு நேர்ந்த விபத்தை - நினைவு திரும்பியதுமே கண்டுபிடித்து விடுவாள்.''

''என்ன செய்ய வேண்டும்?''

''கட்டிய சேலையோடு - தைலாவைக் கொண்டு போய் - ஷவர்க்கு கீழே கிடத்தி - ஒரு ஐந்து நிமிஷம் குளிப்பாட்டு.


உடம்பு சுத்தமானதும் - காருக்கு கொண்டு போய் - பின் சீட்டில் கிடத்து. ஒரு டாக்டரிடம் கொண்டு போ. மயக்கம் தெளிந்ததும் - வீட்டில் கொண்டு போய் விட்டுவிடு.''

ஆல்பர்ட், தைலாவை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டு - பாத்ரூமை நோக்கிப் போனான்.

ஐந்து நிமிஷம் கழித்து வெளியே வந்தான்.

மழை இப்போது நின்றிருக்க - மின்சார ஒயரை பெருத்த முன்னேற்பாடுகளோடு அப்புறப்படுத்திவிட்டு - தைலாவை காருக்குக் கொண்டு போனான்.

ஈரப் புடவையில் சொத சொதத்த அவளை - காரின் பின் சீட்டில் கிடத்திவிட்டு - மறுபடியும் வீட்டுக்கு வந்து கதவைப் பூட்டிக்கொண்டு காரின் ட்ரைவிங் சீட்டுக்கு வந்து - ஸ்டீயரிங்கைப் பிடித்தான்.



## 6

மழை சுத்தமாய் நின்று போயிருந்தது.

சுலோசனாவும், சிவப்பிரகாசமும் போர்டிகோவில் - கைகளைக் கட்டிக்கொண்டு - காத்திருக்க - கார் காம்பெளண்ட் கேட்டுக்குள் நுழைந்தது.

''உம்... பொண்ணு வந்துட்டா...''

''ட்ரைவிங் சீட்ல யாரோ ஒரு ஆம்பிளை உட்கார்ந்திட்டிருக்கிற மாதிரி தெரியுது...''

''அதானே...?''



கார் போர்டிகோவில் வந்து நின்றதும் - காருக்குப் பக்கத்தில் இருவரும் ஓடினார்கள். ஆல்பர்ட் காரினின்றும் இறங்கினான்.

''வணக்கம் ஸார். எம்பேர் ஆல்பர்ட். உங்க டாட்டர் தைலாவுக்கு ஃப்ரண்டான - ரெஜினாவுக்கு நான் அண்ணன்...''

''அது சரிப்பா...! தைலா எங்கே...? அவ கார்ல நீ வந்திருக்கே...?''

''தைலாவைப் பத்தி சொல்லத்தான் இங்கே வந்திருக்கேன்... ஸார்... தயவு பண்ணி நான் சொல்றதைக் கேட்டு டென்ஷன் ஆயிடாதீங்க... தைலாவுக்கு சின்னதா ஒரு ஆக்ஸிடெண்ட்...''

''எ... என்னது... ஆக்ஸிடெண்ட்டா...?'' சுலோசனா கிறீச்சிட்ட குரலில் கத்த - ஆல்பர்ட் கைகூப்பினான். ''தயவு பண்ணி எமோஷனல் ஆயிடாதீங்க! லேசா ஒரு கரண்ட் ஷாக்... அவ்வளவுதான்...''

''கரண்ட் ஷாக்கா...? எப்படி?''

விபரத்தைச் சொன்னான் ஆல்பர்ட். சுலோசனாவின் உடம்பை நடுக்கம் தத்து எடுத்துக் கொண்டது.

''தைலா இப்போ எங்கே இருக்கா...?''

''லாலி ரோட்ல இருக்கிற செந்தில் நர்சிங்ஹோம்ல! டாக்டர் ட்ரீட்மெண்ட் எடுத்து மயக்கத்தை தெளிய வெச்சிட்டார். ஆனாலும் தைலாவுக்கு இன்னும் அந்த அதிர்ச்சி நீங்கலை... நாளைக்குக் காலையில வரைக்கும் - நர்சிங் ஹோமிலேயே இருக்கட்டும்ன்னு - டாக்டர் சொல்லிட்டார். அதான் உங்ககிட்ட விஷயத்தை சொல்லிட்டுப் போலாம்ன்னு... வந்தேன்.''

சிவப்பிரகாசம் ஆல்பர்ட்டின் கைகளைப் பற்றிக் கொண்டார். ''தம்பி! எம் பொண்ணுக்கு எந்த ஆபத்தும் இல்லையே...? மயக்கம் தெளிஞ்சதும் அவ நல்லாப் பேசினாளா...?''

''உங்க டாட்டர் நல்லாவே பேசினாங்க ஸார்... உங்களுக்குத் தகவல் கொடுக்கச் சொன்னதே உங்க டாட்டர்தான். ஹாஸ்பிடல்ல போன் சரியா... ஒர்க் பண்ணாததினாலே... நான் நேர்ல புறப்பட்டு வந்தேன்...''

''எந்த நர்ஸிங்ஹோம்னு சொன்னே தம்பி...?''

''செந்தில் நர்சிங்ஹோம்...''

''கொஞ்சம் வந்து காட்றியாப்பா?'' - சுலோசனாவின் கண்களில் நீர்.

''உங்களைக் கூட்டிட்டுப் போறதுக்குத்தான்... வந்தேன்... வாங்க ஸார்...'' சிவப்பிரகாசமும் சுலோசனாவும் - காரின் பின்சீட்டுக்குப் போக - ஆல்பர்ட் ட்ரைவிங் சீட்டுக்கு வந்தான்.

கார் வேகமெடுத்து -

பத்தே நிமிஷங்களில் - பெய்த மழையில் ஈரமாயிருந்த லாலி - ரோட்டுக்குள் கார் நுழைந்து - செந்தில் நர்சிங் ஹோமுக்கு முன்னால் நின்றது. ஆல்பர்ட் இறங்கி அவர்களை உள்ளே கூட்டிப் போய் - க்ரௌண்ட் ப்ளோரின் கடைசி - ரூமுக்குள் பிரவேசித்தான்.

தைலா ஆஸ்பத்திரியில் கொடுத்த பச்சை நிற கவுனை மாட்டிக் கொண்டு கட்டிலின் நடுவே உட்கார்ந்திருக்க - ஒரு டாக்டரும் நர்ஸும் - அவளுக்கு எதிரே நின்றிருந்தார்கள். தைலாவின் நெற்றியிலும், முழங்கையிலும் - சின்னச் சின்னதாய் இரண்டு பிளாஸ்திரிகள்.

''தை... லா... ஆ... ஆ...''

சுலோசனா தீனமாய் - நெகிழ்வாய் - அலறிக் கொண்டு உள்ளே நுழைந்து - நர்ஸைத் தள்ளிக் கொண்டு - மகளின் பக்கத்தில் உட்கார்ந்து - உடம்பைத் தடவினாள். சிவப்பிரகாசம் அருகிலிருந்த டாக்டரை ஏறிட்டார்.



''டாக்...டர்...! நான் தைலாவோட ஃபாதர்...! பயப்படும்படியா அவ உடம்புக்கு ஒண்ணும் இல்லையே...?''

''நத்திங்...! அதிக வோல்டேஜ் ஷாக்தான். காம்பௌண்ட் கேட் மேல கைபட்டதுமே தூக்கி வீசினதாலே... தப்பிச்சிட்டாங்க... இதை உங்க டாட்டரோட அதிர்ஷ்டம்னுதான் சொல்லணும்...''

''அடுத்த வாரம் அவளுக்குக் கல்யாணம் டாக்டர்.''

''தெரியும். மிஸ்டர் ஆல்பர்ட் சொன்னார்...! ஒரு நாலைஞ்சு நாள்ல நெத்தியில் இருக்கிற சின்னக் காயம் ஆறிடும்...''

சுலோசனா, தைலாவைத் திட்டிக் கொண்டிருந்தாள்.

''மழை பெய்யற மாதிரி இருந்தா... வீட்டுக்கு திரும்பிட வேண்டியது தானே...? அவ்வளவு தூரம் ஏண்டி போனே...?''

''இவ்வளவு பலமா மழை வரும்னு நான் நினைக்கல்லேம்மா...''

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா... அவங்க என்ன நினைப்பாங்களோ...?''

''என்ன நினைப்பாங்க...?''

''அபசகுனம்ன்னு நினைச்சுட்டா...?''

''ஒண்ணும் நினைக்க மாட்டாங்க...''

''டாக்டர்! எங்க பொண்ணை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போலாமா...?''

''ரெண்டு மணி நேரம் இங்கே இருக்கட்டும்... ஒரு இஞ்செக்ஷன் போட்ட பின்னாடி நீங்க கூட்டிட்டுப் போலாம்...''

தள்ளி நின்றிருந்த - ஆல்பர்ட் சிவப்பிரகாசத்திடம் வந்தான். ''ஸார்... நான் வீட்டுக்குப் போகணும். வீட்டைப் பூட்டிட்டு வந்துட்டேன். என்னோட சிஸ்டர் ரெஜினா வந்து வீட்டுக்கு வெளியே காத்திட்டிருப்பா... நான் கிளம்பட்டுமா...?''

''தம்பி!''

அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டார் சிவப்பிர காசம். ''தைலாவுக்கு கூடப் பொறந்த அண்ணன் தம்பி யாரும் கிடையாது. அவளுக்கு ஒரு ஆபத்து வந்தப்ப - கூடப் பிறந்த பிறப்பாட்டம் - இந்த உதவியை பண்ணியிருக்கே...! இதை நாங்க என்னிக்குமே மறக்க மாட்டோம்...''

'கூடப்பிறந்த பிறப்பாட்டம்...'

சிவப்பிரகாசம் சொன்ன இந்த வார்த்தையைக் கேட்டு -

ஆல்பர்ட்டின் இருதயம் - சூட்டுக்கோலால் - நீளமாய் ஒரு சூடு வாங்கிக் கொண்டதைப் போல் துடித்து வலித்தது. தைலாவை ஏறிட்டுப் பார்க்கத் துணிவில்லாமல் மெதுவாய் நடந்தான்.



## 7

ஐந்தாம் தேதி... சாயந்தரம் ஆறு மணி. ரிசப்ஷன்.

கழுத்தில் கனத்த தாலிச் சரடோடு - அமுதகுமாரின் அருகில் நின்று - வருகிறவர்களுக்கு - வணக்கம் சொல்லி - பெரிய வர்களாய் இருந்தால் - காலில் விழுந்து எழுந்து கொண் டிருந்தாள் தைலா. ஏழு மணி சுமாருக்கு ரெஜினா - ரோஸ் நிற ரிப்பன் சுற்றிய அட்டைப் பெட்டியோடு வந்தாள். தைலா கோபித்துக் கொண்டாள்.

''ஏண்டி... காலையில முகூர்த்தத்துக்கு வரலை...?''

''ஸாரிடி... எங்க காலனியில வேற ஒரு கல்யாணம். அவங்க விடவே இல்லை.''



''என்னோட கல்யாணத்தை விட உனக்கு அந்தக் கல் யாணம்தான் முக்கியமாப் போச்சு இல்லையா...?''

''கோபிச்சுக்காதே... தைலா..! ரிசப்ஷன் முடிகிற வரைக் கும் இருந்துட்டுப் போறேன்...''

''கண்டிப்பா...?''

''ஹண்ட்ரெட் பர்செண்ட்!''

''என்னங்க... இவ ரெஜினா... என்னோட காலேஜ்மேட்!''

''அந்த க்யூரியோ கார்டன் அவென்யூ... ல...?''

''அவளேதான்! அவளைக் கூப்பிடப் போய்தான் செமத் தியா கரண்ட் ஷாக் வாங்கிவிட்டேன்...''

அமுதகுமார் கேட்டான்.

''உங்க ப்ரதர் ஆல்பர்ட் வரலையா...?''

''அவர் துபாய் போயிட்டார்...''

''என்னடி இது...? என்னைப் பார்க்க வந்தப்ப உங்க ப்ரதர் ரெண்டு மாச லீவ்ல துபாயிலிருந்து வந்திருக்கிறதா சொன்னே...?''

''ஆமா... சொன்னேன்...! ஆனா... ப்ரதர் லீவைக் கான்ஸல் பண்ணிட்டு துபாய் புறப்பட்டுப் போயிட்டார்...''

''என்ன காரணம்...?''

''தெரியலை...! அவர் எப்பவும் அப்படித்தான் நினைச்சா... லீவு எடுத்துகிட்டு வருவார்.. லீவு முடியறதுக்கு முந்தி புறப்பட்டுப் போயிடுவார்...''

''அன்னிக்கு மாத்திரம் உங்க ப்ரதர் இல்லாமே இருந் திருந்தா இவ்வளவு அழகான பெண்டாட்டி எனக்கு கிடைச்சிருக்க மாட்டா...'' - அமுதகுமார் சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கும்போதே - நண்பன் ஒருவன் வந்து கையைப் பிடிக்க - கவனம் அவன் பக்கம் திரும்பியது.

ரெஜினா, தைலாவின் காதைக் கடித்தாள்.

''என்னடி சாந்தி முகூர்த்தம் இன்னிக்கேவா...? இல்லே போஸ்ட்போன்டா...?''

''எனக்குத் தெரியாது...''

''இந்தக் கதைதானே வேண்டாம்ங்கிறது...?''

''நிஜமாத்தாண்டி...! எனக்குத் தெரியாது.''

''தெரியாது...?''

''தெரியாது...''

''சரி... உன் வீட்டுக்காரர் கிட்டேயே கேட்டுக்கிறேன்...''

''ட்டீ...! வேண்டாம்...''

''பின்னே சொல்லு...''

''நீ சொல்ற 'அது' இன்னிக்குத்தான்னு நினைக்கிறேன்...''

''என்னது... நினைக்கறியா...? கன்ஃபர்மா தெரியாதா...?''

''தெரி... யாது...''

''அப்படீன்னா அவர் கிட்டயே கேட்டு கன்ஃபர்ம் பண்ணிக்கிறேன்.''

''அது... இன்னிக்குத்தாண்டி...''

''அப்படி வா வழிக்கு...! ஹனிமூன் எப்போ...?''

''அடுத்த வாரம்...''

''எங்கே...?''

''கொடைக்கானல்...''


''கொடைக்கானலைக் காட்டிலும்... ஊட்டியில் குளிர் அதிகமாம்... அங்கேயே போயிடுங்க...''

அமுதகுமார் அந்த நண்பனை பேசி அனுப்பிவிட்டு - ரெஜினாவிடம் திரும்பினான். ''உங்க யோசனை ஏற்றுக்



கொள்ளப்பட்டது... மிஸஸ் ரெஜினா... கொடைக்கானல் கான்ஸல்... ஊட்டி... ஓ.கே...''

''ச்சீய்!'' - என்று சொல்லி - ரெஜினாவின் கையைக் கிள்ளினாள் தைலா.



## 8

ராகவமூர்த்தியும் தேவகியும் டாக்டர் வீரபாகுவுக்கும், அவருடைய மனைவி தாரா சந்திரிகாவுக்கும் எதிரே உட்கார்ந்திருந்தார்கள். இடம் வீரபாகு க்ளினிக். நேரம் சாயந்தரம் ஐந்தரை.

''என்ன...? மகனையும் மருமகளையும் கார்ல ஏத்தி ஊட்டிக்கு அனுப்பிச்ச கையோடு - ரெண்டு பேரும் க்ளினிக்குக்கு வந்துட்டீங்க போலிருக்கு...'' வீரபாகு சிரித்துக் கொண்டே கேட்க - தேவகி தவிப்பான குரலில் சொன்னாள்:

''டாக்டர்! என் மகன் அமுதகுமாருக்கு குழந்தை பிறக்க சாத்தியமில்லைங்கிற விஷயத்தை நீங்க... சர்வ சாதாரணமா எடுத்துகிட்ட மாதிரி... எங்களாலே எடுத்துக்க முடியலை...''

''இதோ பாருங்கம்மா...! அமுதகுமாருக்கு ஸ்கூட்டர் ஆக்ஸிடெண்ட் என்னிக்கு நடந்ததோ... அன்னிக்கே - நான் தீர்மானமாய் சொன்ன விஷயம் இது... இந்த உண்மையை அவனுக்கு தெரியப்படுத்தி - அதன் மூலமா அவனை வாழ்நாள் பூராவும் நடைப்பிணமாக்க நான் விரும்பலை. உண்மை அவன் காதுக்கும், அவனைக் கட்டிக்கப் போறவளோட காதுக்கும் போகாமே... ரெண்டு பேரையும் அப்பா, அம்மாவா ஆக்கிக் காட்ட முடியும்ன்னு சொன்னதும்

நான்தான்... ஆக்கிக் காட்டப் போறவனும் நான்தான்... இப்பத் தானே ஹனிமூன் போயிருக்காங்க...! போய்ட்டு வரட்டும்...''

''இவளுக்கு கொஞ்சம் நல்லாவே தைரியம் சொல்லுங்க டாக்டர். அமுதகுமாருக்கும் அந்தப் பொண்ணுக்கும் கல்யாணம் நிச்சயமான தேதியிலிருந்து - இவ புலம்பற புலம்பலை - என்னால தாங்கிக்க முடியலை...'' ராகவமூர்த்தி சொல்ல - அதைப் பொருட்படுத்தாத... தேவகி லேசாய் கலங்கிய விழிகளோடு டாக்டரை ஏறிட்டாள்.

''டாக்டர்...''

''சொல்லுங்கம்மா...''

''செயற்கை முறையில... தைலாவை கர்ப்பமாக்க முடியும்னு சொன்னீங்க... அந்த கர்ப்பத்துல வளர்ந்த குழந்தை நல்லபடியா பிறக்குமா...?''

''அற்புதமா பிறக்கும்...''

டாக்டரின் மனைவி தாரா சந்திரிகா குறுக்கிட்டாள்: ''உங்க பயம் எனக்குப் புரியுதும்மா...! வேற ஒருத்தரோட உயி ரணுவை எடுத்து - உபயோகப்படுத்தறதுனால... குழந்தை ஒழுங்கான முறையில் பிறக்குமா பிறக்காதான்னு சந் தேகம்... இல்லையா...?''

''ஆமா...''

''அந்த சந்தேகமே உங்களுக்கு வேண்டாம்...! குழந்தை அழகாகவும் ஆரோக்யமாகவும் பிறக்கும். அதுக்கு நான் கியாரண்டி போதுமா...?''

''இந்த விவகாரமெல்லாம் தைலாவுக்கு தெரியாமே... பண்ண... முடியுமா டாக்டர்...?''

''தாராளமா பண்ணலாம்... ஸீடோ பெய்ன் மாத்திரைகளை ரெண்டு நாள்ல பாலில் கலந்து கொடுத்தா போதும். அடி



வயித்துல ஒரு வலி கிளம்பும். அந்த வலியைக் காரணம் காட்டி ஹாஸ்பிடல்ல சேர்த்துடலாம். தைலா, ஹாஸ்பிட லுக்கு வந்த பின்னாடி - அவளை மயக்க நிலைக்குக் கொண்டு போறதும் - உயிரணுவை கருப்பைக்குள்ள செலுத்தறதும் சுலபமான வேலை... இந்தக் காரியத்தில் இருக்கிற ஒரே யொரு ரிஸ்க். அந்த திருட்டுத்தனம் அமுதகுமாருக்கும் சரி... தைலாவுக்கும் சரி... கடைசி வரைக்கும் தெரியவே கூடாது...''

ராகவமூர்த்தி சொன்னார் - ''சீக்கிரமாவே இந்தக் காரி யத்தை பண்ணிடறது... உத்தமம் டாக்டர்...''

''எப்ப பண்ணலாம்... நீங்களே சொல்லுங்க...''

''இந்த மாசக் கடைசியில ஏதாவது ஒருநாள்...''

''இவ்வளவு சீக்கிரத்துல அதை பண்ண முடியாது. தைலா வோட மென்சஸ் சைக்கிளிங் டேட்டா வேணும். அதை வெச்சுத்தான் ஒரு டேட்டை ஃபிக்ஸ் பண்ண முடியும்...''

''அப்படீன்னா... ஒரு மூணு மாசமாவது அவகாசம் வேணும்...''

''ஆமா...''



## 9

விழுந்து விழுந்து சிரித்தாள் தைலா. இடம்: ஊட்டி ஏரிக்கரை ரோடு அமுதகுமாரின் பிடியில் அவளுடைய இடை, ''அப்புறம்?'' என்றாள்.

''அப்புறமென்ன...? அவன் ஓடிட்டான்...''

''இந்த மாதிரி ஜோக்கெல்லாம் உங்களுக்கு எங்கிருந்து கிடைக்குது?''

''காலேஜ் டேஸ்ல கலெக்ட் பண்ணியவைதான்...''

''எல்லாமே தமாஷா இருக்கு.''

''ஒரு ரக்பி ஜோக் சொல்லட்டுமா?''

''அதென்ன ரக்பி ஜோக்..?''

''ஒரு மாதிரியான ப்ளேபாய் ஜோக்...''

''சேச்சே... அதெல்லாம் வேண்டாம்... அசிங்கம்.''

''ஒரு அசிங்கமும் இல்லை. சாம்பிளுக்கு ஒண்ணு சொல்றேன். கேட்டுப் பாரேன்.''

''சொல்லுங்க பார்க்கலாம்...''

''ராத்திரி நேரம். பெட்ரூம்ல ஒரு ஆணும் பெண்ணும் கட்டிப் பிடிச்சு படுத்திட்டிருக்காங்க. அவன் சொல்றான். 'நான் சாகிறதுக்குள்ளே என் சொந்தக் கால்ல நின்னு சம்பாதிக்காமே விடமாட்டேன்...'' - அப்படி அவன் சொல்லிட்டிருக்கும்போதே - கதவு தட்டற சத்தம் கேட்குது. உடனே அந்தப் பெண் ஜன்னல் வழியே எட்டிப் பார்க்க - வாசல்ல அவ புருஷன். அவன் கையில துப்பாக்கி. அவ சொன்னாளாம் 'அய்யய்யோ எம்புருஷன் வந்துட்டாரு... சீக்கிரமா உங்க சொந்தக்கால்ல எந்திரிச்சு நில்லுங்க...''

''எனக்கு சிரிப்பே வரலை...''

''யோசிச்சு பாரு. சிரிப்பு வரும்...''

''எனக்கு இந்த சோரம் போற ஜோக்குகளைக் கேட்டாலே எரிச்சலாய் படும்...''

''ஏன்...?''

''அதெப்படிங்க... ஒரு பெண் கட்டின தாலி கழுத்துல இருக்கும்போதே இன்னொருத்தன் மடியில படுக்க முடியும்?''



''அப்படியும் படுக்கற பெண்கள் இருக்காங்களே...?''

''த்தூ!''

''பேப்பரை பிரிச்சுப் பாரு... ஒரு நாளைக்காவது கள்ளக் காதல் விவகாரம் இல்லாமே பேப்பர் வராது...''

''அந்த அளவுக்கு... ஒரு பொண்ணுக்கு துணிச்சல் வர என்ன காரணம்?''

''முதல் காரணம் அவ புருஷன்...''

''எப்படிச் சொல்றீங்க...?''

''வாய்ச்ச புருஷன்... குடிகாரனாயிருப்பான். இல்லேன்னா மத்த பெண்கள் கிட்டே போறவனாயிருப்பான்...''

''புருஷன் மோசமானவராயிருந்தா... அவளும் மோசமானவளா மாறணும்னு ஏதாவது சட்டமா...?''

''அவளும் மனுஷிதானே... அவனுக்கு இருக்கற ஆசாபாசாங்கள்தானே அவளுக்கும் இருக்கும்...?''

''ஏன் அவளாலே புருஷனைத் திருத்த முடியாதா...?''

''முயற்சி பண்ணிப் பார்ப்பா. முடியலைன்னா கடைசி பட்சமா... அவளுக்கு அன்பு கிடைக்கிற பக்கமா பார்த்து மனசை விட்டுடறா...''

''இது ஏத்துக்கக்கூடிய வாதமா எனக்குத் தெரியலை...''

''சரி... விடு... 'ஒரு பெண் ஏன் சோரம் போகிறாள்'னு பட்டி மண்டபம் நடத்தவா... ஊட்டிக்கு வந்தோம்...? ஹனிமூன் வந்த நேரத்தை வேஸ்ட் பண்ண வேண்டாம்... வா... இப்படி?''

''அய்யே... இது ரோடு...''

''ரோட்லேதான் யாருமில்லையே...?''

''அதுக்காக எப்படி வேணும்னாலும் நடந்துக்கிறதா...?''

''உன்னோட வீட்லேயும் சரி... என்னோட வீட்லயும் சரி... பேரன் பேத்தியைப் பார்க்க அவசரப்படுவாங்க போலிருக்கு...''

''ஏன் உங்களுக்கு மட்டும் சீக்கிரமே 'அப்பா' ஆக ணும்ங்கிற ஆசை இல்லையாக்கும்...?''

''நேற்று வரைக்கும் எனக்கு இருந்தது.''

''ஏன் இன்னிக்கு என்னாச்சு...?''

''அப்பா ஆகிறதை ஒரு வருஷம் தள்ளிப் போட லாம்ன்னு இருக்கேன்...''

''தள்ளிப் போடறீங்களா...?''

''ஆமா...''

''அதுக்கு தள்ளிப் படுக்கணுமே? நீங்க தள்ளி படுக்கறவ ராட்டம் எனக்குத் தெரியலை...''

''என்ன சொன்னே...?''

''பச்சையா சொல்லட்டுமா...?''

''சொல்லு...''

''காய்ஞ்ச மாடு...''

''ஏ... ஏய்...'' - தைலாவின் இடுப்பைக் கிள்ளுவதற்காக அமுதகுமார் கையை நீட்ட - அவள் அவன் பிடிக்கு சிக்காமல் நழுவி ஓட ஆரம்பித்தாள்.



## 10

**மா**தம் ஒன்று கரைந்து போயிருக்க - அன்றைக்கு வெள் ளிக்கிழமை காலை. நேரம் ஆறு மணி. வாக்கிங் போவதற் காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்த ராகவமூர்த்தி - டெலிபோன் சிணுங்குவதைக் கேட்டு - ரிஸீவரை எடுத்தார்.



''ஹலோ...''

''வணக்கம் சம்மந்தி... நான் சிவப்பிரகாசம் பேசறேன்.''

''வணக்கம்... சௌக்யம்தானே?''

''சௌக்யம்தான்...! தைலா எந்திரிச்சுட்டாளா?''

''இல்லையே... ரூம் கதவு இன்னும் சாத்தியிருக்கு... என்ன விஷயம்..?''

''இன்னிக்கு எங்க கிராமத்துல இருக்கிற குலதெய்வக் கோயில்ல ஒரு விசேஷம். அதுக்கு தைலாவையும் கூட்டிக் கிட்டு போறதா வேண்டுதல்.''

''பேஷா கூட்டிட்டுப் போங்களேன்.''

''பத்து மணிக்கு கிராமத்துல இருக்கணும். இங்கிருந்து ஏழு மணிக்கு புறப்பட்டாத்தான் பத்து மணிக்குப் போய்ச் சேர முடியும்...''

''தைலாவை இங்கே ஏழு மணிக்கு ரெடியா இருக்கச் சொல்லணும். அவ்வளவுதானே...?''

''ஆமா...''

''நீங்க ஏழு மணிக்கு கார்ல வாங்க. எம் மருமக... போர்டிகோ வாசற்படியில் காத்திட்டிருப்பா... ரெடியா!'' ராகவமூர்த்தி ரிஸீவரை வைத்துவிட்டு - ஹாலின் கோடியி லிருந்த அமுதகுமாரின் அறையை நெருங்கி கதவைத் தட்டினார்.

''டேய்... அமுது...''

''.........''

''அமுது...''

''ம்...''

''தைலாவை கொஞ்சம் எழுப்பிவிடு... அவங்கப்பா போன் பண்ணியிருந்தார். கிராமத்துல இருக்கிற குல தெய்வ கோயிலுக்குப் போகணுமாம். ஏழு மணிக்குள்ளே ரெடியாகணுமாம்...''

''ம்... ம்...''

ராகவமூர்த்தி நகர்ந்துவிட - அறைக்குள்ளே பேச்சுக் குரல்கள்.

''தைலா...''

''....''

''ஏய்... தைலா.''

''ம்...''

''எந்திரி... உங்கப்பா போன் பண்ணியிருந்தாராம். எங்கேயோ கோயிலுக்குப் போகணுமாம்... ஏழு மணிக்கு நீ ரெடியாகணுமாம்...''

தைலா கண்விழித்து - வலது பக்கமாய் கை ஊன்றி - எழ முற்பட்டாள். தலை ஸ்லோ மோஷனில் சுழல - கண்களுக்குள் இருட்டு வந்து புகுந்தது. படுக்கையில் அப்படியே மல்லாந்தாள்.

''தைலா...''

பக்கத்தில் படுத்திருந்த அமுதகுமார் அவளைத் தாங்கிப் பிடித்தான்.

''என்னாச்சு...?''

''தெரியல்லீங்க... தலையை சுத்துது...''

''அப்படியே படுத்துக்க...''



படுத்துக் கொண்டாள். அரை நிமிஷ நேரம் கூட இல்லை. கணவனைக் கூப்பிட்டாள்.

''என்னங்க...?''

''சொல்லு தைலா...''

''வயித்தைப் புரட்டுது... என்னை கொஞ்சம் வாஷ் பேசினுக்குக் கூட்டிட்டுப் போங்க...''

அமுதகுமார் அவளைக் கைத்தாங்கலாய் - எழுப்பி - வாஷ்பேஷினுக்கு - கூட்டிப் போய் - நிறுத்த - ''உவ்வே...'' ஓங்கரித்து வாந்தி எடுத்தாள். கண்களில் கலகலவென்று நீர்.

''தைலா...! டாக்டரைக் கூப்பிடட்டுமா...?''

''வேண்டாங்க... உங்கம்மாவைக் கூப்பிடுங்க...''

''எதுக்கு...?''

''கூப்பிடுங்க... சொல்றேன்...'' - அவள் புன்னகைக்க அமுதகுமார் புரிந்து போன தினுசில் சிரித்தான்.

''என்ன எனக்கு அப்பா பிரமோஷனா...?''

''அதேதான்...''

''ஹிப்ரே...''

தைலாவை தூக்கி - அலாக்காக ஒரு சுற்று சுற்றி கீழே இறக்கினான். தைலா அவன் முன்னுச்சி கிராப்பைப் பிடித்துக் குலுக்கினாள்.

''என்னமோ ஒரு வருஷம் தள்ளி போடலாம்னு சொன்னீங்க...''

''உம் பையன் இவ்வளவு அவசரக்காரனா இருப்பான்னு எனக்குத் தெரியலையே...''

''பையன்தான்னு கன்பர்ம் பண்ணிட்டீங்களா...?''

''பின்னே...?''

''பொண்ணுதான்...''

''நாம போய்ட்டு வந்த தேன்நிலவுக்கு மகத்தான வெற்றி...! நீ சாவகாசமா வாந்தி பண்ணிட்டிரு... நான் அம்மாகிட்ட போய் விஷயத்தைச் சொல்லி அனுப்பி வைக்கறேன்...''

அமுதகுமார் அறைக்கு வெளியே வந்து - சமையல்கட்டு இருந்த பக்கம் ஓட - வாக்கிங் புறப்பட்டுக் கொண்டிருந்த - ராகவமூர்த்தி நின்றார்.

''என்ன... தைலா எந்திரிச்சிட்டாளா?''

''ம்... ம்...''

''மூஞ்சியில என்னடா இவ்வளவு சிரிப்பு...?''

''அப்பா...''

''என்ன...?''

''ஒரே மாசத்துல உங்களுக்கும் அம்மாவுக்கும் தைலா பிரமோஷன் குடுத்துட்டா...''

''பிரமோஷனா...?''


''ஆமாம்ப்பா...! நீங்க தாத்தா, அம்மா பாட்டி...''

ராகவமூர்த்தி திக்கென்று விழித்தார்.

''என்னடா சொல்றே...?''

''மற்றவை அம்மாவிடம் கேட்டுக் கொள்க...'' புன்னகையோடு சொன்னவன் - சமையல்கட்டை நோக்கி வேக வேகமாய் போனான். ராகவமூர்த்தி பதட்டமாய் அவனைத் தொடர்ந்தார்.





# 11

டாக்டர் வீரபாகுவும், தாராசந்திரிகாவும் நம்பாத பார்வைகளோடு ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். பக்கத்தில் நின்றிருந்த அமுதகுமார் கேட்டான்.

''என்ன டாக்டர்... தைலா கன்சீவ்ட் தானே?''

''ஆ... ஆமா...''

''கன்ஃபர்ம்...?''

''கன்ஃபர்ம்...!''

''பின்னே கங்கிராஜுலேட் பண்ணக்கூடாதா? என்னமோ நான் கிரிமினல் குற்றம் பண்ணிட்ட மாதிரி - ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கறீங்களே?''

வீரபாகு வலுக்கட்டாயமாய் புன்னகைத்தார். ''ஒரு ஆனந்த அதிர்ச்சிதான். அந்த விஷயத்துல நீ லேட் பண்ணுவேன்னு நினைச்சேன்.... நீ என்னடான்னா... படு சுறுசுறுப்பா இருந்திருக்கே... கங்கிராட்ஸ்...''

''தாங்க்யூ டாக்டர்...''

''தைலாவைக் கூட்டிக்கிட்டு - கார்ல போய் இரு... உங்க ஃபாதர் மதர்கிட்ட மருந்துகளை பிரிஸ்க்ரைப் பண்ணி அனுப்பறேன்...''

அமுதகுமார் தைலாவை - மேஜையினின்றும் இறக்கி - காருக்கு கூட்டிக் கொண்டு போக - வெளியே நின்றிருந்த ராகவமூர்த்தியும், தேவகியும் உள்ளே போனார்கள். வீரபாகு

நெற்றியைத் தட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். தாரா சந்திரிகா கதவைச் சாத்தினாள்.

ராகவமூர்த்தி கேட்டார்:

''டாக்டர்! இது எப்படி சாத்தியம்...?''

''சாத்தியமே கிடையாது...''

''தைலா கர்ப்பம்தானே...?''

''ஆமா..''

''பின்னே சாத்தியமில்லைன்னு சொல்றீங்க.''

''உங்க மகனாலே அது சாத்தியமாயிருக்க முடியாதுன்னு சொல்றேன்.''

''டாக்டர்! யூ... மீன்...?''

''தைலா தவறு பண்ணியிருக்கா...''

''டா... டாக்டர்...!''


''இந்த உண்மை கசப்பானதுதான்... வேற வழியில்லை... விழுங்கித்தான்... ஆகணும்...''

''தைலா அப்பேர்ப்பட்ட பொண்ணு மாதிரி தெரியலை டாக்டர்... ஒருவேளை அமுதகுமாரைப் பத்தின உங்க மெடிக்கல் ரிப்போர்ட் தப்பு பண்ணியிருக்கலாமே?''

''நெவர்'' - ஏறக்குறைய கத்தினார் வீரபாகு. ''அமுதகுமாரை எந்த ஒரு கத்துக்குட்டி டாக்டர் சோதிச்சாலும் சரி... இந்த ரிப்போர்ட்டைத்தான் குடுக்க முடியும்...! அமுதகுமாரினால் எந்தப் பெண்ணையுமே தாயாக்க முடியாது.''

ராகவமூர்த்தியும் தேவகியும் - நொறுங்கிப் போய் உட்கார்ந்திருந்தார்கள்.





## 12

ஆபீஸ்...

காலை பதினோருமணி. ஏ.ஸி. கசிந்து கொண்டிருந்த தன் அறைக்குள் நுழைந்தான் அமுதகுமார். குஷன் நாற்காலியில் தன்னைக் கிடத்திக் கொண்டவன் - மேஜை மேலிருந்த இண்டர்காம் ரிஸீவரில் தன் பர்சனல் அஸிஸ்டெண்ட் வதனாவைக் கூப்பிட்டான்.

''வதனா! ப்ளீஸ் கம்...''

ஒரு அராபியக் குதிரையின் செழிப்போடு வதனா வந்தாள். தொப்புளும் தோள்பட்டையும் தெரிய - ''குட் மார்னிங் ஸார்...'' சொல்லி பல்வரிசை காட்டினாள்...

''குட்மார்னிங்...''

டிக்டேஷனை எதிர்பார்த்து - கையிலிருந்த 'ஷார்ட் ஹேண்ட் நோட்புக்'கை பிரித்துக் கொண்டாள். அமுதகுமார் கேட்டான்.

''வதனா! நம்ம ஆபீஸ் ஸ்டாஃப்ஸ் இன்னிக்கு மொத்தம் எத்தனை பேர் வந்திருக்காங்க...?''

''ஆல் ஆர் ப்ரஸண்ட் ஸார்...''

''அப்படீன்னா இருநூத்தி மூணு பேர்....''

''ஆமா... ஸார்...''

''இன்னிக்கு சாயந்தரம் அஞ்சு மணிக்கு - எல்லார்க்கும் என்னோட செலவில எஸ்.கே.சி. கொடுங்க...''

''ஸார்! யூ... மீன் ஸ்வீட் காரம் காப்பி...''

''எஸ்...''

''என்ன விசேஷம் ஸார்...?''

''எனக்கு ப்ரமோஷன் கிடைச்சிருக்கு.''

''ப்ரமோஷன்...?'' வதனா உதட்டை குவித்தாள்...

''எஸ்... ப்ரமோஷன் ஆர்டர் என் கைக்கு வர எப்படியும் பத்து மாசமாயிடும். ஆர்டர் கிடைச்சதும் மறுபடியும் ஒரு ட்ரீட்... உண்டு... ப்ளீஸ்! ஒரு நல்ல ஹோட்டலா பார்த்து ஏற்பாடு பண்ணுங்க...''

வதனா குழப்பமாய் தலையாட்டிவிட்டு - அறையினின்றும் வெளியேறியதும் - அமுதகுமார் மேஜை மேலிருந்த டெலிபோனை தன்னருகே இழுத்துக் கொண்டு - ரிஸீவரை எடுத்தான். வீட்டுக்கு டயலைச் சுழற்ற - தைலா கிடைத்தாள்.

''தைலா! என் அருமைப் பெண்டாட்டியே! என்ன பண்ணிட்டிருக்கே...?''

''படுத்துட்டிருக்கேன்...''

''குட்...! அடிக்கடி மாடிப்படி இறங்காதே...''

''இதைச் சொல்லத்தான் போன் பண்ணீங்களா...?''

''மருந்தை விட இதுதான் முக்கியம்... மாடிப்படி இறங்கக் கூடாது. கனமான சாமான்களை - நகர்த்தவோ எடுக்கவோ கூடாது. தரை அதிர்கிற மாதிரி 'தொம்... தொம்'ன்னு நடக்கக் கூடாது...''

''எல்லா ஆரம்ப கால புருஷன்களும் இதே வார்த்தைகளைச் சொல்லித்தான் பெண்டாட்டியைத் தாங்குவாங்க.. நீங்களும் அதையேதான் சொல்லியிருக்கீங்க. வேற ஏதாவது இருக்கா...?''



''ம்... இன்னிக்கு ஆபீஸ் நேரம் முடிஞ்சதும் - ஆபீஸ் ஸ்டாஃப் இருநூத்தி மூணு பேர்க்கும் என்னோட செலவில ஸ்வீட், காரம், காப்பி...''

''தண்டச் செலவு...''

''என்ன சொன்னே...? தண்டச் செலவா...?''

''பின்னே என்னவாம்...? குழந்தை பிறந்த பின்னாடி இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் சரி... இன்னிக்கே இதையெல்லாம் தம்பட்டம் அடிக்கணுமா?''

''ஒரு சந்தோஷந்தானே...?''

''சந்தோஷம்ன்னு நீங்க சொல்றீங்க...! ஆனா நீங்க படற சந்தோஷத்துல ஒரு பர்செண்ட் கூட உங்கம்மாவோ உங்கப்பாவோ படலையே...''

''தைலா! நீ என்ன சொல்றே..?''

''நிஜத்தைத்தாங்க சொல்றேன்...! பேரனோ பேத்தியோ பிறக்கப் போகிற சந்தோஷம் அவங்க ரெண்டு பேர் முகத்திலும் கொஞ்சம் கூட இல்லை.. நான் ஏதாவது பேசினாத்தான் உங்கம்மா பேசறாங்க...''

''எங்கம்மாவும் எங்கப்பாவும் எப்பவுமே கொஞ்சம் அழுத்தம்... அவ்வளவு சீக்கரத்துல சந்தோஷத்தையோ... துக்கத்தையோ வெளிக்காட்டிக்க மாட்டாங்க...''

''எனக்கென்னமோ அவங்க நடவடிக்கை மனசுக்கு நெருடலா இருக்குங்க... நானே உங்களுக்கு போன் பண்ணி சொல்லலாம்ன்னு இருந்தேன்...''

''இப்ப... அவங்க எங்கே...?''

''தலையில இடி விழுந்துட்ட மாதிரி - ஹால்ல உட்கார்ந் திருக்காங்க...! நாம சீக்கிரமா குழந்தை பெத்துக்கிறது அவங்களுக்கு பிடிக்கலையோ... என்னவோ...!''

''சேச்சே! அப்படியெல்லாம் இருக்காது...''

''சாயந்திரம் நீங்களே வீட்டுக்கு வந்து பாருங்க. அப்பத் தான்... தெரியும்...''



## 13

**ஹா**லின் மையத்திலிருந்த சோபாவில் - பக்கம் பக்கமாய் உட்கார்ந்து கிசுகிசுப்பாய் - தாழ்ந்த குரலில் பேசிக் கொண் டிருந்தார்கள் ராகவமூர்த்தியும், தேவகியும்.

''இப்ப... என்னங்க பண்றது...?''

''நல்ல குடும்பம்னு நினைச்சு... சகதியில் போய் காலை வெச்சுட்டோமே!''

''பொண்ணைப் பத்தி விசாரிச்சுப் பார்த்திருக்கணும்...''

''விசாரிச்சுப் பார்க்காமலா இருந்தோம்...?''

''சரி.. இப்ப என்ன பண்ணலாம் சொல்லுங்க... தைலா கிட்டே நான் ஜாடை மாடையாக விசாரிச்சுப் பார்க்கட்டுமா...?''

''வேண்...டாம்...''

''வேண்டாம்னா... இப்படியே விட்டுடறதா...?''

''அவசரப்படாதே தேவகி...! இந்த விஷயத்துல நம்ம பையன் அமுதகுமாரோட மானப்பிரச்சனையும் அடங்கி யிருக்கு... தைலாவோட கர்ப்பத்துக்கு காரணம் யார்ன்னு



அவனைக் கேட்டோம்னா... மாட்டிக்கப் போறதும் நாம தான். ஒரு பெண்ணைத்தாயாக்க... தகுதியில்லாத உங்க மகனை எனக்கு எப்படிக் கட்டி வெக்கலாம்னு அவ கேட்டா... அதுக்கு நம்மளாலே... பதில் சொல்ல முடியாது...! அவளை விடு... நம்ம பையனுக்கே இந்த விஷயம் தெரிஞ்சா... உன்னையும் என்னையும் அவன் விட்டு வெப்பானா...?''

தேவகி சேலைத் தலைப்பால் முகத்தை ஒற்றிக் கொண் டாள்.

''இப்ப... என்னங்க பண்றது...?''

''பேசாமே இருந்துட வேண்டியதுதான்.''

''எப்படீங்க இருக்க முடியும்? இது எவ்வளவு பெரிய அநியாயம்...?''

''அநியாயம்னு பார்க்கப் போனா... நம்ம பையனோட குறையை மறைக்க - கல்யாணம் பண்ணி வெச்சதும் தப்பு தான்... நாம பண்ணினது மட்டும் நியாயமா...?''

''நாம பண்ணினதைக் காட்டிலும் இது பெரிய அநியாய மாச்சே?''

''இதோ பார் தேவகி! இந்த விஷயத்தை மேற்கொண்டு - நீயும் நானும் கிளறிகிட்டே இருக்கிறது சரியில்லை... மறந் துடு...''

''என்னால முடியாதுங்க... அவளைப் பார்த்தாலே... என் உடம்பெல்லாம் - பத்திகிட்டு எரியற மாதிரி இருக்கு...''

''அப்படீன்னா அவளைக் கொஞ்ச நாளைக்கு அம்மா வீட் டுக்கு அனுப்பிடு.''

''அவளை அம்மா வீட்டுக்கு இப்பவே அனுப்பினா... உங்க புள்ளை காரணம் கேப்பானே...?''

"தேவகி! நம்ம நிலைமை இப்போ எப்படியிருக்கு தெரியுமா? திருடனுக்குத்தேள் கொட்டின கதைதான்... தைலாவோட கர்ப்பத்தைப் பத்தி நாம கண்டுக்காமே இருந்துக்க வேண்டியதுதான்..."

மாடியறையில் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

"அவ... வர்றா போலிருக்கு..." - சொன்ன தேவகி தள்ளி உட்கார்ந்தார்... ராகவமூர்த்தி டீபாயின் மேலிருந்த பேப்பரை எடுத்து - படிப்பது போல் பாவ்லா செய்தார்.

தைலா மாடிப்படிகளில் இறங்கி வந்தாள். அவள் பக்கத்தில் வந்ததும் தேவகி வலுக்கட்டாயமாய் புன்னகைத்து, "ஏம்மா! அதுக்குள்ள எந்திரிச்சி வந்துட்டே. படுத்து ரெஸ்ட் எடுத்துக்க வேண்டியதுதானே?" என்றாள்.

தைலா இரண்டு பேரையும் தயக்கமாய்ப் பார்த்தாள்.

"அ...த்...தே..."

"என்னம்மா...?"

"நா... ஒரு கேள்வி கேட்டா நீங்க தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?"

"என்ன கேக்கப்போறே...?"

"உங்களுக்கு ஒரு பேரனோ பேத்தியோ... பிறக்கப் போறதுல சந்தோஷம்தானே?" தைலாவின் இந்தக் கேள்வியைக் கேட்டதும் தேவகியும் ராகவமூர்த்தியும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"ஏம்மா இப்படிக் கேக்கிறே...? எங்களுக்கு பேரனோ பேத்தியோ... பொறக்கிறதைக் காட்டிலும் சந்தோஷமான விஷயம் வேற என்னம்மா இருக்கு?"



தைலா புன்னகைத்தாள். "பேச்சில் காட்டற இந்த சந்தோஷம் முகத்துல இல்லையே அத்தே...!"

"நீ நினைக்கிறது தப்பும்மா...! இவ்வளவு சீக்கிரத்துல நீ விசேஷமானது எனக்கும் மாமாவுக்கும் சந்தோஷம் தான்... நாங்க கொஞ்சம் வாடின முகத்தோடு இருந்ததுக்கு காரணம் வேறே..."

"என்ன...?"

"மாமாவோட குடும்பத் தலைமுறைபடி - பிறக்கிற தலைச்சன் குழந்தை, ஆணா இருந்தா நிலைக்குமாம்... பெண்ணா இருந்தா... கர்ப்பத்திலேயே கலைஞ்சிடுமாம்..."

அழகாகப் பொய் சொல்லி - மருமகளை ஏமாற்றும் மனைவியை - ஆச்சர்யமாய் பார்த்தார் ராகவமூர்த்தி.

தைலா லேசாய் கலவரப்பட்டாள்.

"நிஜமாவா...?"

"இதெல்லாம் இருபது வருஷத்துக்கு முந்தின சமாச்சாரம்.. அந்த தலைமுறைக்கும் - இந்த தலைமுறைக்கும் நடுவே - ஒரு பெரிய இடைவெளியே இப்ப ஏற்பட்டிருக்கு... அதே மாதிரி இப்பவும் நடக்கணும்ங்கிற கட்டாயம் இல்லை... இருந்தாலும் ஒரு பயம் தான்..."

"கர்ப்பத்துல இருக்கிற குழந்தை பெண்ணாயிருந்தா... கலைஞ்சுடுமா...?" தைலாவின் குரல் நடுங்கியது.

ராகவமூர்த்தி மருமகளை ஏறிட்டார். "இதோ.. பாரம்மா! உன் அத்தைக்காரி ஏதேதோ சொல்லி பயமுறுத்தறா... எதையும் காதுல போட்டுக்காதே...! உண்டாகியிருக்கிற பொண்ணு நீ... சந்தோஷமா இருக்கணும்..."

"மாமா! அத்தை சொன்னதைக் கேட்டபிறகு எனக்கே... பயமா இருக்கு..."

"நீ பயப்படவே வேண்டியதில்லேம்மா.. என்னோட தலைமுறைபடி மொதல்ல எனக்குப் பேரன்தான் பொறப் பான்..."

ராகவமூர்த்தி சொல்லிக் கொண்டிருக்கும் போதே -

போர்டிகோவில் -

அந்த ஆட்டோ வந்து நிற்க - அதிலிருந்து ரெஜினா இறங் கினாள். தைலா அத்தையையும், மாமாவையும் மறந்து - வாசலை நோக்கிப் போய் - அவளை எதிர்கொண்டாள். கையைப் பற்றினாள்.

"வா... ரெஜினா..."

"என்ன தைலா... நல்லாயிருக்கியா...?"

"பார்த்தா தெரியலை...?" - இருவரும் உள்ளே வந்தார் கள்.

"லேசா சதை போட்டிருக்கே... பை... த... பை... உங்க வீட்ல.. எனக்கொரு காரியம் ஆகணும்... அதுக்காகத்தான் வந்தேன்... உன்னைப் பார்க்கிறதுக்காக வந்தேன்னு பொய் சொல்ல விரும்பலை..."

"என்ன காரியம்...?"

"உங்க வீட்டு போன்ல ஒரு ஓவர்சீஸ் கால் புக் பண்ணி பேசணும்..."

"ஓவர்சீஸ் காலா...? யார்க்கு?"

"துபாய்ல இருக்கிற என்னோட ப்ரதர் ஆல்பர்ட்டுக் குத்தான்" சொன்ன ரெஜினா ஹால் சோபாவில் உட்கார்ந் திருந்த ராகவமூர்த்திக்கும், தேவகிக்கும் விளக்கம் சொன் னாள். தேவகி, தைலாவிடம் "மேலே கூட்டிட்டு போய்



பேசிட்டிரும்மா... நான் கூல் ட்ரிங்க்ஸ் குடுத்து அனுப்ப றேன்" - என்றாள்.

தைலா ரெஜினாவோடு மாடிப்படி ஏறினாள்.

"ஓவர்சீஸ்கால் பேசவேண்டிய அளவுக்கு ஏதாவது முக்கியமான விஷயமா?"

"ஆமா! போன மாசம் துபாயிலிருந்து இங்கே வந்தப்ப - அவர்க்காக - ரோஸலீனாங்கிற ஒரு பெண்ணைப் பார்த்து - கல்யாணம் பேசினோம். பிரதர்க்கும் பொண்ணைப் பிடிச் சிருந்தது. கல்யாண தேதியைக் கூட முடிவு பண்ணிட்டோம். அந்த நிலைமையில்தான் திடீர்ன்னு - துபாய்க்கு புறப்பட்டுப் போனார். போகும்போது கல்யாணத்தைப் பத்தி நானும் என் னோட ஹஸ்பெண்டும் பேச்செடுத்தோம்... துபாய் போய் லெட்டர் எழுதறேன்னார்..."

"எழுதினாரா...?"

"இன்னிக்கு எழுதியிருக்கார்... அவர்க்கு கல்யாணம் வேண்டாமாம்..."

"என்னது கல்யாணம் வேண்டாமாமா...?"

"ஆமா..."

"காரணம்...?"

நாள் :

"கல்யாணம் பண்ணிக்கிற மனோநிலைல இப்ப இல்லை யாம்?"

"அடப்பாவமே! யாரோ அவரை பயமுறுத்தியிருக் காங்க... இல்லேன்னா துபாய்ல ஏதாவது காதல் அனுபவம் ஏற்பட்டிருக்கும்..."

031, 3NR, NP7

"அதெல்லாம் கிடையாது...! இது வெறும் கிறுக்குத்தனம்... ஓவர்சீஸ் கால் போட்டு 'டோஸ்' விட்டா சரியாப் போயிடும்..."

அறைக்குள் நுழைந்தார்கள்.

''தப்பா நினைச்சுக்காதே தைலா! டெலிகிராப் ஆஃபீஸ் லிருந்துதான் 'கால்' போட்டுப் பேசலாம்ன்னு போனேன்... போனா... அங்கே ஏகப்பட்ட கூட்டம்... சட்டுன்னு உன் வீட்டு ஞாபகம் வந்தது வந்துட்டேன்... என்ன சார்ஜ் ஆகுதோ அதைக் குடுத்துடறேன்...''

''சார்ஜ் கீர்ஜ்ன்னு பேசினா... இங்கிருந்து 'கால்' புக் பண்ணாதே! எங்க அத்தை கூல் ட்ரிங்க்ஸ் கொண்டு வந்ததும் குடிச்சுட்டுப் புறப்படு...''

''சரி.. சரி... கால் புக் பண்ணி குடு...''

''நெம்பர்...?''

கையில் வைத்திருந்த பையைத் திறந்து - ஒரு துண்டுப் பேப்பரை எடுத்து நீட்டினாள் ரெஜினா. தைலா அதை வாங்கிக் கொண்டு - டெலிபோனைத் தொட்டாள். எக்சேஞ்சில் தொடர்பு கொண்டு - நெம்பர் சொல்லி - ஒரு பத்து நிமிஷம் காத்திருந்த பின் - இணைப்பு - கிடைத்தது. ஆல்பர்ட் பேசினான்.

''ஐயாம் ஆல்பர்ட்'' - தைலா ரிஸீவரை ரெஜினாவிடம் நீட்ட அவள் 'நீயே பேசு' - என்றாள். தைலா தயங்கி விட்டு தொடர்ந்தாள்.

''மிஸ்டர் ஆல்பர்ட்! நான் தைலா...''

மறுமுனையில் சில நொடிகளுக்கு கனத்த மௌனம்...

''என்ன பேச்சையே காணோம்...?''

''நீங்களா...?''

''ஏன்... நான் போன் பண்ணக் கூடாதா...?''

''எ... என்ன வி... விஷயம்...?''



''ஆமா... எ.. என்கிட்ட பேச... ஏன் இப்படி நடுங்க றீங்க...?''

''போன்ல... உங்களை நான் எதிர்பார்க்கலை.''

''பின்னே யாரை எதிர்பார்த்தீங்க..?''

''என்னோட சிஸ்டர் ரெஜினாவை...''

''ரெஜினாவும் என் பக்கத்துலதான் இருக்கா...! ஆமா... கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்லிட்டீங்களாமே... ஏன்..?''

''அ... அது வந்து... வந்து...''

''சொல்லுங்க... என்ன காரணம்...?''

''எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்ன்னு நினைச்சேன்...''

''இந்த முடிவு முதலிலேயே வந்திருக்கணும்... ரோஸா லீனாங்கிற பொண்ணை நீங்க பார்த்து சம்மதம் சொல்லி - கல்யாணத் தேதியையும் ஃபிக்ஸ் பண்ணின பிறகு... கல் யாணம் வேண்டாம்ன்னு சொன்னா என்னங்க அர்த்தம்..?''

''ரெஜினாவை கொஞ்சம் பேசச் சொல்றீங்களா?''

''ரெஜினா பேசமாட்டா... நான்தான் பேசப்போறேன்.. அவ... உங்களுக்கு கூடப் பிறந்த சிஸ்ட்டர்ன்னா... நான் கூடப் பிறக்காத சிஸ்டர் அவ்வளவு தான்...''

மறுமுனையில் ரிஸீவர் நழுவும் சத்தம் கேட்டது. தைலா கேட்டாள்.

''என்னாச்சு...?''

''ஒ... ஒ... ஒண்ணுமில்லை...''

''ஏன் இவ்வளவு நெர்வஸா இருக்கீங்க...''

''ப்ளீஸ்! ரெஜினாகிட்டே ரிஸீவரைக் குடுங்க...''

தைலா சிரித்துக் கொண்டே - ரிஸீவரை ரெஜினாவிடம் நீட்டினாள். ''என்னமோ தெரியலை... உங்க அண்ணன் என்கூட பேசறதுக்கு பயப்படறார்.. நீயே பேசு..''

ரெஜினா ரிஸீவரை வாங்கிக் கொண்டு கத்தினாள்.

''அண்ணா! உம் மனசுல நீ என்னதான் நினைச்சுட்டிருக்கே? உன் லெட்டரைப் பார்த்ததும் நானும் என் வீட்டுக்காரரும் அப்படியே ஆடிப் போயிட்டோம் தெரியுமா.''

''.......''

''கல்யாணத்துக்கு பொண்ணு பார்க்கட்டுமான்னு கேட்டதுக்கு சரின்னு தலையாட்டினே! ஒரே பொண்ணைத் தான் பார்க்கப் போனோம். அந்தப் பொண்ணையே உனக்கும் பிடிச்சிருந்தது. உன்னோட வசதிப்படிதான் கல்யாணத் தேதியையும் ஃபிக்ஸ் பண்ணினோம். ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிட்டு திடீர்ன்னு துபாய்க்குப் போனே...! இப்ப அங்கே போய் உட்கார்ந்துட்டு - கல்யாணமே வேண்டாம்ன்னு லெட்டர் எழுதறே...? உம் மனசுல நீ... என்னதான் நினைச்சிட்டிருக்கே...?''

''......''

''கல்யாணம் வேண்டாம்ன்னு சும்மா ஒரே வாக்கியத்தை திருப்பித் திருப்பி சொல்லிட்டிருந்தா என்ன அர்த்தம்...? உன்னால எனக்கும் என் வீட்டுக்காரர்க்கும் சண்டை.''

''.......''

''முடிவா நீ என்னதான் சொல்றேன்னா?''

''.......''

''இதான் உன் முடிவா...?''

''........''



ரிஸீவரை 'த்தட்'டென்று சாத்தினாள் ரெஜினா... முகத்தில் கோபம் கொந்தளித்தது. தைலா கேட்டாள். ''என்ன சொல்றார் ஆல்பர்ட்...?''

''இந்த ஜென்மத்துல அவருக்கு கல்யாணம் வேண்டாமாம்.. இதைப் பத்தி லெட்டர்ல எழுதறதோ... போன்ல பேசறதோ... கூடாதாம்...'' ரெஜினாவின் கண்களில் நீர் நிரம்பியிருந்தது.

''ஆள் இப்படி ஒரேயடியா மாற என்ன காரணம்?'' - தைலா சோபாவில் உட்கார்ந்து - யோசிக்க ஆரம்பித்தாள்... கூல்ட்ரிங்க் டம்ளர்களோடு தேவகி உள்ளே வந்தாள்.



## 14

**தை**லாவுக்கு அது மூன்றாவது மாதம்... காலை நேரங்களில் தலைசுற்றுவதும், வாந்தியும் அதிகமிருந்தாலும் - மற்ற நேரங்களில் தெம்பாகவே இருந்தாள்... அம்மா வீட்டிற்கு அடிக்கடி போய் வந்தாள். செவ்வாயும் வெள்ளியும் அத்தையோடு கோயிலுக்கு போய் வந்தாள்.

அன்றைக்கு மத்தியானம். மணி மூன்று இருக்கும். அமுத குமார் ஆபீஸிலிருந்து திரும்பி - தூங்கிக் கொண்டிருந்த தைலாவைத் தொட்டு எழுப்பினான்.

''தைலா...''

தைலா கண் விழித்து ஆச்சர்யப்பட்டாள்... ''என்ன அதுக்குள்ளே மணி அஞ்சாயிடுச்சா...? இப்பதானே படுத்தேன்...?''

''மணி மூணுதான்! நீயும் நானும் ஒரு இடத்துக்கு கிளம்ப றோம்... புறப்படு...''

''எங்கே...?''

''ஸ்கேன் யூனிட்டுக்கு...''

''எதுக்கு...?''

''உனக்குப் பிறக்கப் போற குழந்தை ஆணா பெண்ணான்னு ஸ்கேன் பண்ணிப் பார்த்தா தெரிஞ்சுடும்....''

''அதெல்லாம் வேண்டாங்க... பொறக்கப்போற குழந்தை ஆணாயிருந்தா என்ன..? பெண்ணாயிருந்தா என்ன...?''

''நான் அதுக்காகச் சொல்லலை... தைலா. எங்க அம்மா வும் அப்பாவும் ஏதோ பரம்பரை வழக்கம்ன்னு சொல்லி கவலைப்பட்டுகிட்டு இருந்தாங்களே? அவங்க பயத்தைப் போக்க வேண்டாமா...?''

''பெண் குழந்தைன்னா கர்ப்பத்திலேயே அழிஞ்சுடும்... ஆண் குழந்தைன்னா நிலைக்கும்ங்கிறதை நீங்களும் நம்பறீங் களா...?''

''எனக்கு சுத்தமா நம்பிக்கை கிடையாது. இருந்தாலும் 'ஸ்கேன்' பண்ணிப் பார்த்து - பெண் குழந்தையா இருந்தா... கொஞ்சம் அதிகப்படியான ஜாக்கிரதையோடு இருந்துக்க லாமே...?''

''நான் ரெடி...''

''ட்ரஸ் பண்ணிட்டு ஹாலுக்கு வா... நான் அம்மாகிட்டே விஷயத்தை சொல்லிட்டிருக்கேன்...''

''அஞ்சே நிமிஷத்துல வந்துடறேன்...''



அமுதகுமார் கீழே இறங்கிப் போனான். ஹாலில் யாரும் இல்லாமல் போகவே - கடைசியில் இருந்த அறையை நெருங்கியவன் சட்டென்று நின்றான். உள்ளே தேவகியும், ராகவமூர்த்தியும் - தாழ்ந்த ஸ்தாயியில் பேசிக் கொண்டிருந் தார்கள்.

''பாம்புன்னும் தாண்ட முடியலை... பழுதுன்னும் மிதிக்க முடியலை.''

''கல்யாணத்துக்கு முன்னாடியே நல்லா விசாரிச்சுப் பார்த் திருக்கணும். இப்ப வெளியே விசாரிக்கவும் முடியாது. ஈரத் துணியில சுத்தின கோழி மாதிரி 'கம்'ன்னு இருக்க வேண் டியதுதான்...''

''எம்மனசு ஆறலைங்க...! மூணு மாசத்துக்கு முந்தி அடி வயித்துல எரிய ஆரம்பிச்ச நெருப்பு இன்னமும் தகதகன்னு எரிஞ்சிட்டிருக்கு...''

''ஏம்மா! பயர் சர்விஸுக்கு போன் பண்ணட்டுமா...?'' உதட்டில் புன்னகையோடு - கேட்டுக் கொண்டே - உள்ளே நுழைந்தான் அமுதகுமார். ராகவமூர்த்தியும் தேவகியும் திடுக் கிட்டுப் போய் திரும்பினார்கள். ராகவமூர்த்தி கேட்டார்.

''நீ.. நீயா... எப்படா ஆபீஸிலிருந்து வந்தே...?''

''இப்பத்தான்...''

''எ... என்ன திடீர்ன்னு...?''

''தைலாவை வெளியே ஒரு இடத்துக்கு கூட்டிட்டு போகணும்...''

''எங்கே...?''

''ஸ்கேன் யூனிட்டுக்கு...! அது சரி... ஏதோ பாம்பு... ஈரத் துணி கோழின்னு ஏதோ பேசிட்டிருந்தீங்களே... என்ன அது...?''

அ... அதுவா... அது வந்து... எண்ணூர்ல.. என் தங்கச்சி ஒருத்தி இருக்காளே...?''

''வசந்தி.. தானே...?''

''ஆமா! வசந்திதான்... அவளைக் கல்யாணம் பண்ணிக் குடுத்த இடம் சரியில்லையாம்... மாப்பிள்ளை குடிகார னாம்... வீட்டுக்கே கூத்தியாளைக் கூட்டிட்டு வர்றானாம்.''

''ஆறு மாசத்துக்கு முன்னாடியே சொன்ன நியூஸ் தானே இது?''

''இப்ப அதிகமாகிப் போச்சாம்...''

''அதுக்கு நீ கவலைப்பட்டு என்னம்மா.. பிரயோஜனம்?''

''எம் மனசு ஆறலையே.. கூடப் பொறந்த பொறப் பாச்சே...! கிளி மாதிரியான பொண்ணைக் கோட்டான் கையில குடுத்துட்டாளே...? மாப்பிள்ளையைப் பத்தி விசாரிச்சுப் பாரடின்னு தலைத்தலையா அடிச்சுகிட்டேன்... கேட்டாளா...?''

ஹாலில் தைலாவின் குரல் கேட்டது.

''என்னங்க நான் ரெடி...''

அறையினின்றும் வெளியே வந்தான் அமுதகுமார். அவனைத் தொடர்ந்து வந்த தேவகியிடமும், ராகவமூர்த்தி யிடமும் சொல்லிக் கொண்ட தைலா கணவனோடு - போர்டிகோவில் நின்றிருந்த காரை நோக்கிப் போனாள்.

கார் புறப்பட்டு போகும் வரை மௌனம் காத்த - ராகவமூர்த்தி பின் வாயைத் திறந்தார்... ''நல்லவேளை! நாம பேசினதை அமுதகுமார் சரியா கேக்கலை...''

''சமயத்துக்கு வசந்தியோட விவகாரம் கை குடுத்ததி னாலே தப்பிச்சோம்.''



''இவன் காரை நிறுத்திட்டு எப்போ உள்ளே வந்தான்னே தெரியலையே?''

''இனிமே இவன் வீட்ல இருக்கானா... இல்லையான்னு... தெளிவா தெரிஞ்சுகிட்டுதான் பேசணும்...''

''தேவகி...''

''என்னங்க...''

''தைலாவோட பேச்சையும், நடத்தையையும் கவனிச் சியா...?''

''அதுல என்ன இருக்கு...?''

''அவ பேச்சிலேயும் சரி... நடத்தையிலேயும் சரி... துளி கல்மிஷம் கூட இல்லை... அவ உண்மையாவே ஒரு தப்பான பெண்ணாயிருந்தா... இந்த சந்தோஷத் துள்ளலை அவ கிட்டே பார்க்க முடியாது...''

''அப்படீன்னா அந்த கர்ப்பம்...?''

''நம்ம அமுதகுமாரை வேற ஒரு பெரிய டாக்டர் கிட்டே கூட்டிட்டுப் போய் காட்டினா என்ன...?''

''அது விஷப்பரிட்சை.. விஷயம் தெரிஞ்துன்னா... சகல மும் நாசமாயிடும்...!''

''நம்ம டாக்டர் கிட்டயே... இதுக்கு... ஒரு... வழி.. கேட்டுப் பார்த்தா என்ன...''

''போன் பண்ணி அவரை வீட்டுக்கே வரச் சொல்லட் டுமா?''

''மொதல்ல அதைப் பண்ணுங்க.''



## 15

டாக்டர் வீரபாகு நிதானமான முடிவில் - ஆனால் தீர்மானமாய் - சொன்னார். ''இதோ பாருங்க ராகவமூர்த்தி... உங்க பையன் அமுதகுமார் விஷயத்தை திரும்பத் திரும்ப கிளறிட்டிருக்கிறதுல... ஒரு பிரயோஜனமும் இல்லை. அவரோட மெடிக்கல் ரிப்போர்ட்டை டெல்லி விஞ்ஞான கழக லேப்புக்கு.... அனுப்பி குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லைங்கிறதை கன்பார்ம் பண்ணிகிட்டேன். போன மாசம் மன்த்லி 'செக்-அப்'புக்காக வந்த அமுதகுமாரை மறுபடியும் ஒரு தடவை 'தரோவா' செக் பண்ணி ஊர்ஜிதமும் பண்ணிகிட்டேன்... உங்க மருமகள் கிட்டே என்னமோ தப்பு இருக்கு. அதை மொதல்ல கவனிங்க...''

ராகவமூர்த்தி பெருமூச்சு விட்டார். ''டாக்டர்! தைலாவைப் பார்த்தா மோசமான பொண்ணு மாதிரி தெரியலை..?''

டாக்டர் புன்னகைத்தார். ''மோசமான பெண்ணாயிருந்தா... அவ நெற்றியில் எழுதியா ஒட்டியிருக்கும்...? நிச்சயமா உங்க மருமக எங்கேயோ தவறியிருக்கா...! அவளுக்கும் இன்னொரு ஆணுக்கும் நிச்சயமா தொடர்பு இருக்கு... அவளோட நடவடிக்கைகளை உன்னிப்பா... அப்ஸர்வ் பண்ணுங்க. வர்ற போன்காலை ரகசியமா 'ட்ரேஸ்' பண்ணுங்க. திருட்டுத்தனம் வெளியே வந்துடும்...''

தேவகி குறுக்கிட்டாள்.

''டாக்டர்! நீங்க சொன்ன வேலைகளையெல்லாம் நான் செஞ்சு பார்த்துட்டேன்... கடந்த மூணுமாச காலத்துல தைலா



வுக்கு வெளியேயிருந்து எந்த ஆணோட போன்காலும் வந்ததில்லை...

''அவளைப் பார்க்க சொந்தக்காரங்க வர்றாங்களா...?''

''அவளோட அப்பா அம்மாவைத் தவிர வேற யாரும் வந்ததில்லை.''

''தைலாவுக்கு அத்தை மகன், முறைப் பையன்னு யாராவது உண்டா...?''

''அதையும் விசாரிச்சுப் பார்த்துட்டேன்... இல்லை.''

''அவ வெளியே போயிருக்கிற நேரத்துல.. ரூமைக் கிளறிப் பாருங்களேன். டயரி கிடைச்சா புரட்டிப் பாருங்களேன். கண்டிப்பா ஒரு 'க்ளூ' கிடைக்கும்.''

காம்பௌண்ட் கேட்டுக்குள் கார் நுழையும் சத்தமும் - தொடர்ந்து ஹார்ன் சத்தமும் கேட்டது. ராகவமூர்த்தி வெளியே எட்டிப் பார்த்துவிட்டு சொன்னார்.

''ஸ்கேன் யூனிட்டுக்குப் போனவங்க திரும்பி வர்றாங்க போலிருக்கு...''

மூன்று பேரும் வாசலையே பார்த்துக் கொண்டிருக்க - போர்டிகோவில் கார் வந்து நின்றது.

அமுதகுமாரும் தைலாவும் சிரிப்போடு - காரினின்றும் இறங்கி - உள்ளே வந்தார்கள். டாக்டரைப் பார்த்து அமுதகுமார் ஆச்சர்யப்பட்டான்.

''என்ன டாக்டர் திடீர்ன்னு...?''

''மில் ஓனர் ஒருத்தர் வீட்டுக்கு விசிட் போனேன்... அவர் வெளியே போயிட்டார். அப்படியே அப்பாவைப் பார்த்துட்டு போலாம்ன்னு காரைத் திருப்பிட்டேன். நீங்க ரெண்டு

பேரும் ஸ்கேன் யூனிட்டுக்கு போயிருக்கிறதா அப்பா சொன்னார். எந்த ஸ்கேன் யூனிட்டுக்கு போனீங்க...?''

''ரே விஜய் ஸ்கேனிங் சென்டர்.''

''ஸ்கேனிங் பண்ணிப் பார்த்தீங்களா?''

''பார்த்துட்டோம்.''

''என்ன பேபி...?''

''மாஸ்டர் அமுதகுமார்...''

டாக்டர் வீரபாகு உற்சாகமில்லாமல் - கையை நீட்டி - 'கங்கிராட்ஸ்' சொல்லி கைகுலுக்கினார். அமுதகுமார் ராகவமூர்த்தியை ஏறிட்டான்.

''அப்பா! உங்களுக்கு பேரன்...? பரம்பரை பயம்ங்கற சான்ஸே இல்லை...''

ராகவமூர்த்தியும் தேவகியும் கட்டாயமாய் - ஒரு சந்தோஷ சிரிப்பு சிரித்தார்கள். வீரபாகு தைலாவிடம் திரும்பினார்.

''என்னம்மா...! நான் எழுதித் தந்த டானிக்கையும், மாத்திரைகளையும் ஒழுங்கா சாப்பிட்டு வர்றியா...?''

''சாப்பிடலைன்னா இவர் விடுவாரா...?''

''அமுதகுமார் ஒரு சின்ஸியர் ஹஸ்பெண்ட்'' என்று சொல்லிச் சிரித்த டாக்டர் எதேச்சையாய் கேட்கிற மாதிரி கேட்டார்.

''நீ பி.எஸ்.ஸி தானே...?''

''ஆமா டாக்டர்..''

''எந்த காலேஜ்ல கோர்ஸை முடிச்சே...?''



''பி.எஸ்.ஜி. ஆர்ட்ஸ்...''

''அங்கே கே-எஜுகேஷன் இருக்கா...?''

''இருக்கே...''

''நான் படிக்கிற காலத்துல... வெறும் ஜெண்ட்ஸ் மட்டும் தான்...'' என்றவர் ராகவமூர்த்தியைப் பார்த்து அர்த்தபுஷ்டியோடு புன்னகைத்தார்.

தைலா கேட்டாள்.

''எதுக்காக டாக்டர் திடீர்ன்னு என்னோட படிப்பைப் பத்தி கேக்கறீங்க?''

''நத்திங் ஸ்பெஷல்! அது ஒரு காஷுவலான கேள்வி தான்... கல்யாண பத்திரிக்கையில் பி.ஏ.ன்னு பார்த்த ஞாபகம். அதான் கேட்டேன்...''



## 16

**தை**லாவுக்கு அது ஏழாவது மாதம். வயிறு சற்று பெரிதாக இருந்ததால் நடக்கவே சிரமப்பட்டாள். மாடிப்படிகளில் ஏறினாலோ... இறங்கினாலோ... உடம்பு பூராவும் வியர்த்து ஊற்றியது. காலை நேரங்களில் பங்களாவைச் சுற்றியிருந்த லைனில் - கணவன் அமுதகுமாரின் தோளைப் பற்றிக் கொண்டே வாக்கிங் போனாள்.

அன்றைக்கும் காலை - சிரமமாய் நடந்து - வாக்கிங் போய்க் கொண்டிருக்க - அமுதகுமார் சிரித்தான்.

''எனக்கென்னமோ சந்தேகமா இருக்கு...''

"என்ன சந்தேகம்...?"

"ரெட்டைக் குழந்தை பிறக்குமோன்னு..."

"பிறக்கட்டுமே...! இப்ப.. என்ன...?"

"மறுபடியும் ஸ்கேன் பண்ணி பார்த்துடலாமா...?"

"அதெல்லாம்... வேண்டாங்க..." சொல்லிக் கொண்டே லைனின் மத்தியில் இருந்த சிமெண்ட் திட்டின் மேல் உட்கார்ந்து கொண்டாள் தைலா. சேலைத் தலைப்பால் முகத்தை ஒற்றிக் கொண்டாள்.

"ஏய்... என்ன உட்கார்ந்துட்டே...?"

"போதுங்க... என்னால முடியலை..."

"என்னது முடியலையா...? இன்னும் ஒரு ரவுண்ட் பாக்கியிருக்கே. நடந்தாதான் சுகப்பிரசவம்ன்னு டாக்டர் சொல்லியிருக்கார்...இல்லேன்னா... வயித்தைக் கீறி..."

"அய்யோ... சொல்லாதீங்க... நடக்கிறேன்..." - எழுந்து அமுதகுமாரின் தோளைப் பற்றிக் கொண்டு மெதுவாய் நடைபோட்டாள் தைலா.

"நேத்து ராத்திரி டெலிபோன் டைரக்டரியை புரட்டிப் பார்த்து ஒரு நேம் லிஸ்ட்டை பிரிப்பேர் பண்ணிட்டேன்..."

"எதுக்கு...?"

"நம்ம வாரிசுக்கு பேர் வெக்க வேண்டாமா...?"

"பேர் வெக்கறதுக்காக டெலிபோன் டைரக்டரியை பார்க்கணுமா...! நான் ஏற்கெனவே பேரை செலக்ட் பண்ணிட்டேன்..."

"செலக்ட் பண்ணிட்டியா...? என்ன பேரு...?"

"இப்ப சொல்லமாட்டேன்..."



"இந்த பிகுதானே வேண்டாம்ங்கிறது...?"

"பிகு இல்லை... இன்னிக்கு நாள் நல்லாயில்லை. அஷ்டமி. நம்ம குழந்தையோட பேரை இன்னிக்கு நான் முதல் முதலா சொல்ல விரும்பலை..."

"சரி... என்னிக்கு சொல்வியாம்...?"

"என்னோட சீமந்தம் என்னிக்கு...?"

"வர்ற புதன்கிழமை..."

"அன்னிக்கு உங்க கால்ல விழுந்து நமஸ்கரிக்கும் போது... நம்ம பையனோட பேரைச் சொல்வேன்..."

"அம்மா தைலா..."

குரல் கேட்டு தைலா திரும்பினாள். வரவேற்பறை ஜன்னலில் ராகவமூர்த்தியின் முகம் தெரிந்தது.

"என்ன மாமா...?"

"உனக்கு போன் வந்திருக்கம்மா..."

"வர்றேன் மாமா..."

"போன்ல யாருப்பா...?"

"தைலாவோட ஃப்ரெண்ட் ரெஜினா..."

கணவனின் தோளைப் பற்றிக் கொண்டு வேகவேகமாய் நடந்தாள் தைலா. "இவ... எதுக்காக இந்நேரத்துக்கு போன் பண்றா...?"

ஹாலுக்குள் நுழைந்து - டீபாயின் மேல் ஒருக்களித்து வைத்திருந்த ரிஸீவரை எடுத்தாள். "ஹலோ..."

"தைலா... நான் ரெஜினா..."

"என்னடி... இவ்வளவு காலையில போன்?"

"என் வீட்டுக்கு டெலிபோன் வந்தாச்சு..."

"அட... எப்போ...?"

"ஆபீஸ்ல அவர்க்கு ஒரு பிரமோஷன் கிடைத்தது. உடனே... வீட்டுக்கு போனை ப்ரொவைட் பண்ணிட்டாங்க..."

"அப்படீன்னா இனிமே அடிக்கடி பேசலாம்..."

"கண்டிப்பா! ஆமா உனக்கு என்னிக்கு சீமந்தம்?"

"வர்ற புதன்கிழமை...! என்னோட மதர் உன்னைக் கூப்பிட வருவாங்க... கண்டிப்பா வந்துடு..."

"சீமந்தத்தை எங்கே வெச்சிருக்கீங்க...?"

"பிரஸிடெண்ட் ஹால்ல..."

"நம்ம பட்டாளம் வருமில்லையா...?"

"அம்மா எல்லாரையும் கூப்பிடறேன்னு சொல்லியிருக் காங்க..."

"உன்னோட உடம்புக்கு எப்படியிருக்கு...? குழந்தை வயித் துல அசையுதா...?"

"அதையேன் கேக்கறே...? இப்பவே அவன் 'கபடி' விளை யாடறான். உதை வாங்க முடியலை..."

"பையன்தான்னு முடிவு பண்ணிட்டியா...?"

"ஸ்கேன் பண்ணிபார்த்துட்டோம்."

"உன்னோட மாமனார்க்கும் மாமியார்க்கும் ஒரே சந் தோஷமா இருக்குமே?"

"ம்... இருக்காங்க..."

"என்னடி சுரத்து குறையுது...?"



"அது இருக்கட்டும்...? உன்னோட அண்ணன் ஆல்பர்ட் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டாரா...?"

"அந்தக் கதை உனக்குத் தெரியாதா...?"

"கதையா...? என்னடி சொல்றே...?"

"துபாய் வேலையை ராஜினாமா பண்ணிட்டு... பம்பாய்க்கு வந்து அங்கே இருக்கிற கிறிஸ்தவ மிஷின் காலேஜ்ல சேர்ந் துட்டார்..."

"யூ... மீன்..."

"சாமியார். பிரச்சார போதகர்..."

"அவர்க்கு திடீர்னு என்னாச்சு...?"

"தெரியலை..."

"நீயும் உன் வீட்டுக்காரரும் போய் கேக்கலையா...?"

"இவர் வேண்டாம்ன்னுட்டார். உங்கண்ணன் கூட ஏதா வது பேச்சு வார்த்தை வெச்சுக்கிட்டே... நீயும் அவன் கூடவே போயிட வேண்டியதுதான்னு சொல்லிட்டார்."

"பாவம்! உன்னோட அண்ணன்..."

"பாவமில்லை... கொழுப்பு."

"ஏண்டி திட்டறே... அவர் மனசுல என்ன ஆதங்கமோ...?"

"எதுவாயிருந்தாலும் எங்ககிட்ட சொல்லலாமில்லையா...?"

"நான் என்ன சொல்றேன்னா...?"

"இதோ பார் தைலா...... இனிமே ஆல்பர்ட்டைப் பத்தி - எதுவும் கேட்காதே... நான் மறந்துட்டேன்... எங்க வீட்டு போன் நெம்பரை நோட் பண்ணிக்க... உனக்கு ஓய்வா

இருக்கும் போது பேசு... நானும் லீஷரா இருந்தா பேச றேன்..."

"நெம்பர் என்ன...?"

"ஃபோர் நைன் டூ நாட் ஃபோர்."

நெம்பரை நோட் பண்ணிக்கொண்டு - ரிஸீவரை வைத்தாள், தைலா. அருகே சோபாவில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த அமுதகுமார் கேட்டான்.

"என்ன போன்ல ஒரே புலம்பல்?"

"ரெஜினாவோட அண்ணன் ஆல்பர்ட்டை.... உங்களுக்குத் தெரியுமில்லை...?"

"பேஷா! உன்னைக் காப்பாத்தின ஹீரோவாச்சே...?"

"அவர் சாமியாராயிட்டாராம்."

"என்னது...?"

"கிறிஸ்டின் மெஷின்லே சேர்ந்து பிரச்சார போதகர் மாதிரி ஆயிட்டாராம்..."

"அட! திடீர்ன்னு என்னாச்சு... அவர்க்கு...?"

"யார்க்கும் ஒண்ணும் புரியலையாம்.. ரெஜினாவோட வீட்டுக்காரர் ஆல்பர்ட் மேலே ரொம்பவும் கோபமா இருக்காராம்..."

அமுதகுமார் நெற்றியைத் தேய்த்தான். "ஆஸ்பத்திரியில் வெச்சு ஒருநாள்தான் அவரைப் பார்த்தேன்.... அன்னிக்கே அவர் என்கூட சரியாப் பேசலை... ஆஸ்பத்திரி ஜன்னல் கம்பிகளை பிடிச்சுகிட்டு - வெளியே பெய்யற மழையை வெறிக்க பார்த்துட்டிருந்தார்."

தேவகி உள்ளேயிருந்து வந்தாள்.



"தைலா...! நீ வாக்கிங் போயிட்டு வந்துட்டியா?"

"ஆச்சு அத்தே..."

"சரி கெய்ஸர்ல தண்ணி சூடாயிடுச்சு... போய் குளி. இன்னிக்கு செவ்வாய்க்கிழமை. மறக்காமே தலைக்கு ஊத்திக்கோ..."

"சரி அத்தே..."

இடுப்பில் கை வைத்து - மெதுவாய் பாத்ரூமை நோக்கிப் போனாள் தைலா.



## 17

நர்ஸிங் ஹோம். டாக்டர் வீரபாகுவின் அறை. மெடிசன் ஸ்டாக் நிலவர லெட்ஜரைப் புரட்டிக் கொண்டே அழைப்பு மணியைத் தட்டினார் டாக்டர் வீரபாகு.

வெளியே நின்றிருந்த நர்ஸ் உள்ளே வந்தாள்.

"கம்பௌண்டர் முஸ்தாபாவைக் கூப்பிடு..."

"ஆள் டீக்கடைக்கு போயிருக்கார் டாக்டர்."

"வந்ததும் உடனே வந்து என்னைப் பார்க்கச் சொல்லு" நர்ஸ் தலையாட்டிக் கொண்டே வெளியே போக - அவருடைய மனைவி தாரா சந்திரிகா ரவுண்ட்ஸை முடித்துவிட்டு உள்ளே வந்தாள்.

"ரூம் நெம்பர் பதினேழில் இருக்கிற பேஷண்ட் இன்னிக்கு பகலைத் தாண்டாது போலிருக்கே..."

அவள் சொல்வதைப் பொருட்படுத்தாமல் லெட்ஜரைப் புரட்டிக் கொண்டிருந்தார் வீரபாகு.

''என்னங்க... நான் சொன்னது காதுல விழுந்ததா?''

''ம்... ம்...''

''என்ன ம்.. ம்...?''

''போயிடும்னு முடிவு பண்ணின கேஸ்தானே அது?''

''அந்த லெட்ஜர்ல அப்படி என்ன இருக்குன்னு பார்த்திட்டிருக்கீங்க?''

''ஊழல்...''

''ஊழலா...?''

''ஆமா... கம்பௌண்டர் முஸ்தாபாவை நம்பி மெடிசன்ஸ் இன்சார்ஜைக் கொடுத்தது மகா தப்பு...''

''ஏன் என்னாச்சு...?''

''காஸ்ட்லி அயிட்டம் மருந்து பூராவும் காணோம். ஸ்டாக் பொஸிஷன்ல பாதி மருந்தைக் காணோம்...''

''அவன்கிட்டே கேக்க வேண்டியதுதானே?''

''அதான் கூப்பிடச் சொல்லியிருக்கேன்...''

''கொஞ்ச நாளாவே அவன் போக்கு சரியில்லை... ஹாஸ்பிடலுக்கு லேட்டா வர்றதும்... ஏதாவது காரணம் கேட்டா... எகத்தாளமா பதில் சொல்றதும்...''

''அவனை வெக்க வேண்டிய இடத்துல வெச்சிருக்கணும்...''

''பத்தரை மணிக்கு பிரஸிடெண்ட் ஹால்ல தைலாவுக்குச் சீமந்தம் மணி பத்தாகப் போவது... இந்த நேரத்துல



லெட்ஜரைப் பிரிச்சு வெச்சுக்கிட்டு உட்கார்ந்துட்டா பங்க்ஷனுக்கு நாம எப்ப... போறது...?''

''முஸ்தாபா வரட்டும். விசாரிச்சிட்டு போயிடலாம்...''

''எந்த மருந்தெல்லாம் ஷார்ட்டேஜ்...?''

''எல்லா மருந்துமே...''

டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே - முஸ்தாபா உள்ளே வந்தான். நடுத்தர வயது. வெள்ளை பேண்ட் வெள்ளை ஷர்ட். லேசாய் சிவந்த கண்கள். பட்டையாய் கறுப்பும் வெள்ளையும் பெற்ற மீசை.

''கூப்பிட்டீங்களா டாக்டர்...''

''மெடிஸன் ஸ்டாக் ரெஜிஸ்டரை நீதானே மெய்ன்டைன் பண்ணிட்டு வர்றே...?''

''ஆமா...''

''லெட்ஜர்ல மென்ஷன் பணியிருக்கற எண்ணிக்கைக்கும் - ஸ்டாக்ல இருக்கிற எண்ணிக்கைக்கும் வித்தியாசம் இருக்கே?''

''இருக்காதே...''

''இருக்கு...''

''அப்படியே இருந்தாலும் ஒண்ணு ரெண்டுதான் இருக்கும்.''

''வேலியம்... லெட்ஜர்ல ஒரு குரோஸ் இருக்கிறதா எழுதியிருக்கே. ஆனா ஸ்டாக்ல ஒரு மாத்திரையைக் கூட காணோம்...''

''அது... வந்து...''

''எடுத்து வெளியே வித்திருப்பே...''

''நான் எதுக்காக விக்கணும்?''

''சரி.. அப்படின்னா மாத்திரை எங்கே?''

''நான் இல்லாத நேரத்துல யாராவது வந்து எடுத்துட்டுப் போயிருக்கலாம்.''

டாக்டர் வீரபாகு நாற்காலியைத் தள்ளிக் கொண்டு கோபமாய் எழுந்தார். ''ராஸ்கல் பொய்யா சொல்றே...?''

''நான் எதுக்காகப் பொய் சொல்லணும்?''

''இதோ பார் முஸ்தாபா! நீ கொஞ்ச நாளாவே சரியில்லை. ஒழுங்கா ட்யூட்டி பார்க்கிறது கிடையாது. ரெண்டு தடவை குடிபோதையில வந்திருக்கே...''

''யார் சொன்னது...?''

''யாரோ சொன்னாங்க...''

''யாரோ சொன்னா நம்பிடறதா..?''

''என்ன? எதிர்த்துப் பேசறியா...? அவுட்..! இனிமே உனக்கு இங்கே வேலை கிடையாது...'' கதவுக்கு வெளியே கையைக் காட்டினார் டாக்டர்.

முஸ்தாபா மெல்லச் சிரித்து தோள்களை குலுக்கிக் கொண்டான். ''டாக்டர்! நான் பேசின பொய்க்கும், நான் செஞ்ச திருட்டுத்தனத்துக்கும் என்னை ரொம்ப சுலபமா வெளியே 'போ'ன்னு சொல்லிட்டீங்க...! ஆனா உங்க பொய்க்கும், உங்க திருட்டுத்தனத்துக்கும் 'வெளியே போ'ன்னு சொல்றது யாரு...?''

வீரபாகு முகம் மாறினார்.

''என்ன உளர்றே..?''



''நான் உளறலை... டாக்டர்... ராகவமூர்த்தியோட மகன் அமுதகுமாரை அவங்க குடும்பத்தோடு சேர்ந்து ஏமாத்தறீங்களே... இது சரியா? அமுதகுமார்க்கு குழந்தை பிறக்காதுன்னு தெரிஞ்சிருந்தும் - அவனுக்கு கல்யாணம் பண்ணவும் - அந்தப் பொண்ணுக்கு திருட்டுத் தனமா... செயற்கை முறையில் கருத்தரிக்க வைக்கவும் திருட்டுத்தனமா ஏற்பாடு பண்ணீங்களே...? இது எந்த வகையில் நியாயம்...?

டாக்டர் வீரபாகுவும் தாரா சந்திரிகாவும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

முஸ்தாபா அலட்சியமாய் உதட்டைச் சுழித்துக் கொண்டு - தொடர்ந்தான். ''இன்னிக்கு அந்தப் பொண்ணு கர்ப்பம். இந்த கர்ப்பத்துக்குக் காரணம் நீங்க பண்ணின தில்லுமுல்லு காரியம்தான். இதை நான் அமுதகுமார்கிட்டே போய்... சொன்னா என்னாகும் தெரியுமா...?''

''முஸ்தபா! இதெல்லாம் உனக்கு..?''

''உங்க பேச்சை ஒட்டுக் கேட்டதுல எனக்குக் கிடைச்சுது...! ஒரு பொண்ணுக்கு குழந்தையைக் குடுக்க முடியாத... அமுதகுமார்க்கு இந்த விஷயம் தெரிஞ்சா என்னாகும் தெரியுமா...?''

''முஸ்தபா...''

வீரபாகு அவனுடைய கைகளைப் பிடிக்க வர - முஸ்தபா உதறினான். உறுமினான். ''என்னையா நீ வெளியே போகச் சொன்னே...? இன்னும் கொஞ்ச நேரத்துல பார்... இந்த முஸ்தபா எப்படி விஸ்வரூபம் எடுத்து... உன் வண்டவாளத்தையெல்லாம்... தண்டவாளத்துல ஏத்துறான்னு..''

''முஸ்தபா... நான் சொல்றதைக் கேளு...''

''எதுக்காகக் கேட்கணும்...? நீதான் என்னை 'வெளியே போ'ன்னு சொல்லிட்டியே...! வெளியே போறேன். நேரா...

சீமந்தம் நடக்கிற பிரஸிடெண்ட் ஹாலுக்குப் போறேன்... அமுதகுமார்கிட்டே உன்னோட தில்லுமுல்லு வேலையைச் சொல்றேன்...''

''முஸ்தாபா...''

அவன் வெளியே போனான்.

''முஸ்தாபா! நில்லு...''

அவன் நிற்காமல் வேகமாக நடந்தான்.

வீரபாகு இருட்டு முகத்தோடு - மனைவியைப் பார்த்தார்.

''தாரா! இப்ப என்ன பண்றது...?''

''விஷயம் அமுதகுமார்க்கு தெரிஞ்சா... நிலைமை எக்கச்சக்க விபரீதமாயிடுமே...''

''ராகவமூர்த்தி பிரஸிடெண்ட் ஹால்லதான் இருப்பார். அவர்க்கு போன் பண்ணி முஸ்தாபா வந்திட்டிருக்கிற விஷயத்தை சொல்லிடலாமா...?''

''சீக்கிரமா போன் பண்ணுங்க! பாவி! எல்லாத்தையும் ஒட்டுக் கேட்டிருக்கான்...''

''அந்த டைரக்டரியை எடுத்து - பிரஸிடெண்ட் ஹாலுக்கு என்ன போன் நெம்பர்னு பாரு...''

தாரா சந்திரிகா டைரக்டரியை எடுத்து - புரட்டி போன் நெம்பரைப் பார்த்துச் சொல்ல - வீரபாகு ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலைச் சுழற்றினார்.

இணைப்பு கிடைத்தது.

''ஹலோ... பிரஸிடெண்ட் ஹால்... ஆபீஸ்...?''

''எஸ்...''



''அங்கே ஒரு சீமந்த பங்க்ஷன் நடக்குது. அந்த ஃபங்க்ஷன்ல ராகவமூர்த்தின்னு ஒருத்தர் இருப்பார். அவர்கிட்டே அர்ஜென்டா பேசணும்... கொஞ்சம் கூப்பிட்டு விடறீங்களா...?''

''நீங்க யாரு...?''

''டாக்டர் வீரபாகு..''

''லைன்ல இருங்க...''

காத்திருந்தார். நெற்றியிலும் பிடரியிலும் வியர்வை பிசுபிசுத்தது. நிமிஷ நேரத்துக்குப் பின் - ராகவமூர்த்தி லைனுக்கு வந்தார்.

''என்ன டாக்டர்... ஃபங்க்ஷனுக்கு வர முடியாததற்கு ஏதாவது காரணம் சொல்லப் போறீங்களா?''

''ராகவமூர்த்தி! ஒரு விபரீதத்தை உடனே நீங்க தடுத்தாகணும்.''

''விபரீதமா...?''

''ஆமா...! நம்ம நர்சிங்ஹோம்ல கம்பௌண்டரா இருந்தானே முஸ்தாபா...? அவனுக்கு அமுதகுமார் விஷயம் தெரிஞ்சிருக்கு...'' என்று ஆரம்பித்த டாக்டர் அவசர குரலில் சற்று நேரத்திற்கு முன் நடந்த சம்பவத்தை விவரித்தார்.

மறுமுனையில் ராகவமூர்த்தி ஆடிப்போனார்.

''கம்பௌண்டர் முஸ்தாபா இங்கே வந்திட்டிருக்கானா?''

''ஆமா...!''

''அவனை ஏன் விட்டீங்க டாக்டர்...?''

''அவனை எங்களால தடுத்து நிறுத்த முடியலை...''

''நர்சிங்ஹோமை விட்டு எப்ப புறப்பட்டான்...?''

''இப்பத்தான் ரெண்டு நிமிஷத்துக்கு முந்தி.''

''நீங்க... உடனே கார்ல புறப்பட்டு வாங்க டாக்டர்...''

''நானும், என்னோட ஓய்ஃப் தாராவும் புறப்பட்டு வர்றோம். நாங்க வர்றதுக்குள்ளே அவன் அங்கே வந்துட்டான்னா... அவனை வாசலிலேயே மறிச்சு தனியா கூட்டிட்டு போய் சமாதானம் பண்ணுங்க... கேக்கிற பணத்தை தர்றதா சொல்லுங்க... மசிஞ்சுருவான்.''

''டாக்டர்...! அவன் மசிவானா...?''

''பணத்துக்குக் கண்டிப்பா மசிவான்...''

''அவனை நீங்க விட்டிருக்கக்கூடாது டாக்டர்... அங்கேயே பேசி அவனை சமாதானப்படுத்தி இருக்கணும்...''

''அவனை சமாதானம் பண்ற சூழ்நிலை ஆஸ்பத்திரியில் இல்லை ராகவமூர்த்தி. அவனைப் பேசவிட்டா.. விஷயம் தெரியாத மத்தவங்களுக்கும் விஷயம் தெரிஞ்சுடும்...''

''சரி நீங்க உடனே வாங்க டாக்டர்... என் ஒருத்தனால மட்டும் அந்த முஸ்தாபாவை சமாளிக்க முடியும்ன்னு தோணலை...''

''நான் புறப்பட்டுட்டேன்...'' - டாக்டர் வீரபாகு ரிஸீவரை வைத்துவிட்டு - மேஜையின் மேலிருந்த கார் சாவியை எடுத்துக் கொண்டார்.



## 18

டாக்டரின் கார் பிரஸிடெண்ட் ஹால் போய்ச் சேர்ந்த போது - ஹாலின் வாசலிலேயே ராகவமூர்த்தி தவிப்பாய்



காத்திருந்தார். உள்ளே டேப்ரிக்கார்டரில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட நாதஸ்வர இசையும் - பெண்களின் பேச்சுக் குரல் சத்தமும் கதம்பமாய் கலந்து கேட்டுக் கொண்டிருந்தது. டாக்டர் வீரபாகுவும், ராதா சந்திரிகாவும் காரினின்றும் இறங்கி அவரை நெருங்கினார்கள்.

''என்ன முஸ்தாபா வந்தானா...?''

''வரலையே டாக்டர்...''

''எந்த நிமிஷத்திலும் அவன் வந்துடலாம்...''

''அவனை நர்சிங்ஹோமிலேயே ஹேண்டில் பண்ணியிருக் கலாமே டாக்டர்?''

''முடியலை...! முடிஞ்சிருந்தா விட்டிருப்பேனா...?''

ஹாலின் உள்ளேயிருந்து அமுதகுமார் வேகவேகமாய் வந்தான். ''என்ன டாக்டர். எவ்வளவு லேட்...? சரியா... ஃபங்க்ஷன் நேரத்துக்கு வந்திருக்கீங்க... இப்படித்தான் ஒரு ஃபேமிலி டாக்டர் வர்றதா...?''

''ஹாஸ்பிடல்ல ஒரு அவசர கேஸ்...''

''உங்களுக்கு என்னிக்குத்தான் அவசர கேஸ் இல்லை டாக்டர்... ம்... வாங்க... உள்ளே...! ஏன் வாசல்லேயே நின்னுட்டீங்க...'' - டாக்டரின் கையைப் பற்றி உள்ளே இழுத்துக் கொண்டு போனான் அமுதகுமார்.

ராகவமூர்த்தியை வாசலிலேயே நிற்கும்படி ஜாடை காட்டிவிட்டு - அமுதகுமாரைப் பின்தொடர்ந்து போனார்கள் டாக்டர் தம்பதிகள்.

ஹால் முழுக்க பெண்கள் கூட்டம். சொற்பமாய் ஆண் களின் தலைகள். விரிக்கப்பட்ட ஜமுக்காளத்தின் மத்தியில் - போடப்பட்டிருந்த நாற்காலியில் - தைலா உட்கார்ந்

திருந்தாள். ஏராளமான ஜரிகை பார்டரில் ஊதாநிற பட்டுச் சேலை. கழுத்தில் பெரிய காசு மாலை. இரண்டு கைகளிலும் மஞ்சள் வளையங்களாய் மின்னும் புது வளையல்கள்.

தைலாவை நெருங்கிய - டாக்டர் தாராசந்திரிகா பதட்டத்தை மறைத்துக் கொண்டு புன்னகைத்தாள். ''இன்னும் மூணு மாசத்துல உன் மடியில குழந்தை இருக்கும்....''

அமுதகுமார் பின்னால் நின்றபடி சொன்னான். ''டாக்டர்! தைலாவுக்கு ரெட்டைக் குழந்தைதான் பிறக்கும்ன்னு நான் நினைக்கிறேன்.''

''பிறக்கட்டும்...! அதனாலென்ன...? அந்த தாத்தா பாட்டி வீட்ல ஒண்ணு வளரட்டும். இந்த தாத்தா பாட்டி வீட்ல ஒண்ணு வளரட்டும்...''

எல்லோரும் சிரித்தார்கள்.

டாக்டர் வீரபாகு - நாற்காலியொன்றில் உட்கார்ந்து கொண்டே வாசலைத் திரும்பிப் பார்த்தார்.

ராகவமூர்த்தி போட்டிருந்த மேல்துண்டால் - முகத்தில் அரும்பியிருந்த வியர்வையை ஒற்றிக் கொண்டு - நெருப்பின் மேல் நிற்பதைப் போல் தத்தளித்துக் கொண்டிருந்தார்.

தைலாவின் அப்பா சிவப்பிரகாசம் அமுதகுமாரை நெருங்கிக் கேட்டார். ''மாப்ளே! ஃபங்ஷனை ஆரம்பிச்சுடலாமா...?''

''ஆரம்பிச்சுடலாமே!''

''உங்கப்பா ரொம்ப நேரமா வாசலிலேயே நிக்கிறார்...''

''நான் போய் கூட்டிட்டு வர்றேன்... மாமா...'' சொன்ன அமுதகுமார் வாசலை நோக்கிப் போனான். வியர்த்து ஊற்றிக் கொண்டிருந்த ராகவமூர்த்தியை நெருங்கினான்.



''அப்பா...''

திரும்பினார்...

''என்னப்பா! வாசலிலேயே நின்னுட்டிருக்கீங்க...? ஃபங்க்ஷனை ஆரம்பிக்க வேண்டாமா...?''

''ம... மணி என்ன...?''

''பத்தரை...''

''வ... வ.. வரவேண்டியவங்களெல்லாம் வந்தாச்சா...?''

''எல்லாரும் வந்தாச்சு... நம்ம டாக்டரும் அவரோட மிஸஸும் தான் வரலைன்னு காத்திருட்டிருந்தோம். இப்ப அவங்களும் வந்தாச்சு...''

''ச.. ச... சரி... ந... நட... உள்ளே போலாம்...''

நகர முயன்ற ராகவமூர்த்தியைக் கையமர்த்தினான். ''அப்பா! ஒரு நிமிஷம் நில்லுங்க...''

நின்றார்.

''ஏம்ப்பா... என்னவோ மாதிரி இருக்கீங்க...?''

''எ.. எப்படி இருக்கேன்?''

''வேர்த்து.. கறுத்து...! மருமகளுக்கு சீமந்தம் நடக்கிற சந்தோஷத்தையே முகத்துல காணோமே...?''

''ஒ... ஒண்ணுமில்ல.. அமுதம்... காலையிலிருந்து ஒரே அலைச்சல். பிரஷர் கொஞ்சம் ஜாஸ்தியாயிடுச்சு...''

''மாத்திரை சாப்பிட்டீங்களா...?''

''ம்.. சாப்பிட்டேன்...''

''பிரஷர் அதிகமாயிருந்தா... 'கம்'ன்னு உட்கார்ந்து ரெஸ்ட் எடுத்துக்க வேண்டியதுதானே... ஏன் வாசல்ல வந்து நின்னுட்டிருக்கீங்க...?''

''வர்றவங்களை வரவேற்க வாசல்ல ஆள் இருக்க வேண்டாமா...?''

''என்கிட்ட சொல்லியிருந்தா நான் நின்னிருப்பேனே...! சரி.. சரி... உள்ளே வாங்க... ஃபங்க்ஷன் ஆரம்பிக்கலாமான்னு தைலாவோட அப்பா கேட்கிறார்...''

ராகவமூர்த்தி மறுபடியும் ஒருதடவை - வாசலை எட்டிப் பார்த்துவிட்டு - ஹாலின் உள்ளே போனார்.

தைலாவின் அப்பா சிவப்பிரகாசம் எதிர்கொண்டார். ''சரியா பத்தரைக்கு ஃபங்ஷனை ஆரம்பிச்சாத்தான்... பதினொரு மணிக்குள்ளே முடிச்சு சாப்பாட்டு இலை போட்டுட முடியும்...''

''ஆரம்பிச்சுடுங்க...''

சிவப்பிரகாசம் தன் மனைவிக்கு கண்ணைக் காட்ட - சீமந்த காரியங்கள் நடக்க ஆரம்பித்தன.

டாக்டர்க்கு பக்கத்தில் பெருமூச்சோடு உட்கார்ந்தார் ராகவமூர்த்தி.

''டாக்டர்...''

''ம்...''

''ஆளை இன்னமும் காணோம்...'' ராகவமூர்த்தி கிசுகிசுத்தார்.

''எப்படியும் வருவான். வராமே போகமாட்டான்...''

தைலாவைச் சுற்றி உட்கார்ந்திருந்த பெண்கள் கூட்டம் எதற்காகவோ சிரித்தது. வீடியோ காமிராவின் வெளிச்சம் அவர்கள் மேல் கொட்டியது.

''முஸ்தாபா வீடு எங்க இருக்கு டாக்டர்?''



''ரத்தினபுரியில்.''

இருவரும் வாசலையே திரும்பித் திரும்பி பார்த்தபடி உட்கார்ந்திருக்க நேரம் ஓடியது.

10.40.

10.45.

''சம்மந்தி! எந்திரிச்சு நில்லுங்க.. கால்ல விழற மருமகளை ஆசீர்வாதம் பண்ணுங்க... டாக்டர்! நீங்களும் எந்திரிச்சு நில்லுங்க...''

சிவப்பிரகாசம் சொல்ல - டாக்டர் வீரபாகுவும் ராகவமூர்த்தியும் எழுந்து நின்றார்கள். தைலா சிரமமாய் நடந்து வந்து - இரண்டு பேர்களின் கால்களிலும் விழுந்து எழுந்தாள்.

''உன் மாமியார் கால்ல விழும்மா...'' யாரோ அவளைக் கூட்டிக் கொண்டு நகர - டாக்டர் தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தார்.

நேரம் 10.50.

''வரமாட்டான்னு நினைக்கிறேன். சும்மா உங்களை மிரட்டிட்டுப் போயிருக்கான்...'' ராகவமூர்த்தி சொல்ல - டாக்டர் தலையாட்டினார்.

''அந்த ராஸ்கலை நம்ப முடியாது... எந்த நிமிஷத்திலும் அவன் வந்து அமுதகுமார் கிட்டே விஷயத்தை சொல்லலாம்....''

காத்திருந்தார்கள். நேரம் 11.00.

''சம்மந்தி... லஞ்ச் போட்டுரலாமா...?''

''ம்... ம்...''

தைலா பம்மின வயிறோடு யார் யார் காலிலோ விழுந்து வணங்கிக் கொண்டிருந்தாள். அமுதகுமார் சிரித்து கலாட்டா செய்தான்.

''இதுதான் உனக்கு நல்ல எக்ஸர்சைஸ்...! இன்னும் நல்லா குனி. எம் புருஷனும் கச்சேரிக்கு போறாங்கிற மாதிரி - நமஸ்காரம் பண்ணக்கூடாது. நல்லா குனிஞ்சு ரெண்டு பாதத்தையும் தொடணும்.''

''ஏண்டா! அவளை இப்படிப் படுத்தறே...?''

''பின்னே சீமந்தம்னா சும்மாவா...?''

பெண்கள் எல்லோரும் சிரித்தார்கள்.

அதே விநாடி -

பிரஸிடெண்ட் ஹால் அலுவலகத்தைச் சேர்ந்த - ஒரு நபர் வேகவேகமாய் வந்து - ராகவமூர்த்திக்கு எதிரே வந்து நின்றார். ''ஸார்! இங்கே டாக்டர் வீரபாகு யார்...?''

''இவர்தான்...''

''ஸார்! உங்களுக்குப் போன்.''

''எங்கிருந்து...?''

''ஹாஸ்பிடல்லயிருந்து நர்ஸ் யாரோ பேசறாங்க...''

''வாங்க போலாம்.'' டாக்டர் சற்று பதட்டமாய் - அந்த நபரைத் தொடர்ந்து போனார். ஹாலின் முன்பக்கம் இருந்த அறையில் - ஒரு மேஜையின் மேல் மல்லாந்திருந்த ரிஸீவரை எடுத்து குரல் கொடுத்தார்.

''ஹலோ யாரு...?''

''டாக்டர்! நான் நர்ஸ் கீதா.''




''என்ன... ஏதாவது எமர்ஜென்ஸி கேஸா...?''

''இல்ல டாக்டர்! இன்ஸ்பெக்டர் ஒருத்தர் உங்களைப் பார்க்கிறதுக்காக வந்திருக்கார்.''

''இன்ஸ்பெக்டரா...? எதுக்கு?''

''சாராயம் குடிக்கப் போன இடத்துல நம்ம ஹாஸ்பிட்டல் கம்ளெண்டர் முஸ்தாபாவை யாரோ கத்தியால குத்தி ஆள் ஸ்பாட்லயே அவுட்டாம். முஸ்தாபாவைப் பத்தி விசாரிக்கிற துக்காக வந்திருக்கார்.''

நர்ஸ் கீதா சொல்ல - டாக்டர் வீரபாகு அதிர்ந்தார்.



## 19

**மா**தம் ஒன்று காணாமல் போயிருக்க - அன்றைக்கு சாயந்தரம் ஆறு மணி சுமார்க்கு ராகவமூர்த்தியின் வீட்டில் டெலிபோன் ஒலித்தது.

சாப்பிட்டு - ஓய்வாக சோபாவில் சாய்ந்திருந்த ராகவ மூர்த்தி ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...''

''பேசறது யாரு... அமுதகுமாரோட அப்பாவா...?''

''ஆமா...''

''உங்க மருமக தைலாவுக்கு என்னிக்கு பிரசவம்?''

''நீங்க யாரு...?''

''என் பேரு உண்மை விளம்பி...''

''உண்மை விளம்பியா...?''

''ஆமா...! ஊர்ல யார் யார் பொய் பேசி மத்தவங்களை ஏமாத்தறாங்கன்னு கண்டுபிடிக்கிறதுதான் என்னோட வேலை...''

''உனக்கு இப்ப என்ன வேணும்..?''

''உண்மை வேணும்.''

''உண்மையா... என்ன உண்மை...?''

''உங்க மருமக நைலா வயித்துல வளர்றது நிஜமாகவே அமுதகுமாரோட குழந்தைதானா...?''

''டேய்ய்ய்...!''

''கோபப்படாதீங்க பெரியவரே...! உண்மைகள் கசப்பாகத் தான் இருக்கும். சொல்லுங்க... அது அமுதகுமாரோட குழந்தைதானா...?''

''ஆ... ஆமா...''

''பொய்! உங்க மகனுக்குத்தான் ஒரு பொண்ணை... அம்மாவாக்கக்கூடிய அருகதை கிடையாதே...! நைலா வோட வயித்துல வளர்ற குழந்தைக்கு அப்பா 'யார்'ன்னு இந்த உண்மை விளம்பிக்குத் தெரியும்...''

''யா... யாரு... சொல்லு...?''.

''உண்மையாவே உங்களுக்கு அதை தெரிஞ்சுக்க ஆசை யிருந்தா உடனே நான் சொல்ற இடத்துக்கு நீங்களும் உங்க மனைவியும் புறப்பட்டு வாங்க....''

''எ... எங்கே வரணும்...?''



''ஹோட்டல் குரு... ரூஃப் கார்டன் ரெஸ்டாரெண்ட் டுக்கு... வாங்க...! அஞ்சாம் நெம்பர் டேபிள்ல உங்களுக்காக நான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்...''

ரிஸீவர் வைக்கப்பட்டுவிட - ராகவமூர்த்தியும் ரிஸீவரை வைத்துவிட்டு பக்கத்து அறையை நோக்கி குரல் கொடுத்தார்.

''தேவகி...''

அவள் வெளியே வந்தாள்.

''என்னங்க...?''

''கிளம்பு...''

''எங்கேங்க...?''

''நைலா விஷயமா மறுபடியும் ஒரு விவகாரம்.''

''என்ன... விவகாரம்...?''

''வா.. கார்ல போகும்போது சொல்றேன்...''

''நைலா - அவளோட அம்மா வீட்லயிருந்து இன்னும் கொஞ்சநேரத்துல வந்துடுவாளே...?''

''அவளுக்கு போன் பண்ணி ஏழுமணிக்கு மேலே வரச் சொல்லிட்டு கிளம்பலாம்...''

''நீங்களே போன் பண்ணுங்க...''

ராகவமூர்த்தி போன் செய்ய - மறுமுனையில் - நைலாவே கிடைத்தாள்.

''என்ன மாமா திடீர்ன்னு போன்...?''

''அம்மா நைலா! நானும் உன்னோட அத்தையும் ஒரு கல்யாண ரிஷப்சனுக்காக வெளியே கிளம்பிட்டிருக்கோம். நீ நம்ம வீட்டுக்கு வர்றதாயிருந்தா... ஏழு மணிக்கு மேலே வாம்மா...''

''யாரோட கல்யாணம் மாமா...?''

''என் சிநேகதரோட பொண்ணுக்கு... திடீர்னு இப்பத் தான் ஞாபகத்துக்கு வந்தது... நாங்க போய்ட்டு ஏழு மணிக்குள்ளே வந்துடுவோம்... நீ ஏழுமணிக்கு மேல புறப்பட்டு வாம்மா...''

''சரிங்க மாமா...''

ராகவமூர்த்தி ரிஸீவரை வைத்துவிட்டு - பரபரவென்று தயாராகி - தேவகியோடு வெளியே வந்து - வீட்டைப் பூட்டிக் கொண்டு - காரில் கிளம்பினார்.

''இப்பவாவது விஷயத்தைச் சொல்லுங்க...'' - தேவகி கேட்க ராகவமூர்த்தி உலர்ந்து போன தொண்டையில் விஷயத்தைச் சொன்னார்.

தேவகி சேலைத் தலைப்பால் முகத்தையும் கழுத்தையும் ஒற்றிக் கொண்டாள். ''அமுதகுமாரைப் பத்தின உண்மை தெரிஞ்ச - முஸ்தாபா கூட இப்ப உயிரோடு இல்லை. போன் பண்ணினது யாராயிருக்கும்...?''

''ஒருவேளை முஸ்தாபா... தனக்கு தெரிஞ்ச யார்கிட்ட யாவது இந்த உண்மையைச் சொல்லியிருக்கலாமில்லையா...?''

''அவன் சொன்னதுல ஒரு விஷயம் புதுசா இருக்கு தேவகி.''

''என்ன...?''

''அமுதகுமார்கிட்ட இருக்கிற குறையை மாத்திரம் அவன் சொல்லலை. தைலாவோட வயித்துல வளர்ற குழந்தைக்கு அப்பா யாருங்கிற உண்மையும் அவனுக்குத் தெரிஞ்சிருக்கு...''



''அமுதகுமார்க்கு நாம கல்யாணத்தை பண்ணி வெச்சது பெரிய முட்டாள்த்தனம். பேசாமே அவன்கிட்டே உண்மையைச் சொல்லிட்டுப் போயிருக்கலாம்...''

பத்து நிமிஷ பயணத்தில் ஹோட்டல் குரு வந்தது. காரை கார் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு - இருவரும் லிஃப்டுக்கு வந்தார்கள்.

ஏழாவது மாடியில் இருந்த ரூஃப் கார்டன் தளத்துக்கு - பயணித்து - பிரவேசித்தார்கள்.

ரூஃப் கார்டனில் சொற்பமான கும்பல். மங்கலான உருண்டை விளக்குளில் வெளிச்சத்தில் நடந்து போய் - ஐந்தாம் எண் மேஜையை நெருங்கினார்கள். நெருங்கிய வர்கள் ஆச்சர்யப்பட்டார்கள்.

மேஜையைச் சுற்றியிருந்த -

மூன்று நாற்காலிகளில் -

டாக்டர் வீரபாகு, டாக்டர் தாரா சந்திரிகா, அமுதகுமார் உட்கார்ந்திருந்தார்கள்.



## 20

அமுதகுமார் மட்டும் புன்னகைத்தான். ''வாங்கப்பா.....? உட்காருங்க.''

''டேய்... அமுதம்...?'' ராகவமூர்த்தியும் தேவகியும் - திணற - அமுதகுமாரின் புன்னகை பரப்பளவில் பெரிதா கியது. ''உங்களுக்கு 'உண்மைவிளம்பி'ன்னு போன் பண்ணி பேசினது நான்தான்... டெலிபோன் ரிஸீவரோட வாய்க்கு -

ஒரு கர்ச்சீப்பை போர்த்தி பேசினா... பெத்த மகனோட குரலைக்கூட அடையாளம் கண்டுபிடிக்க முடியாதுங்கிறது நிஜம்தான். உட்கார்ங்கப்பா. உட்கார்ந்துக்கிட்டே ஆச்சர்யப் படலாம்...''

ராகவமூர்த்தியும், தேவகியும் உட்கார்ந்தார்கள்.

அமுதகுமார் தொடர்ந்தான். ''நான் ஒரு பெண்ணை தாயாக்க முடியாதுங்கற உண்மை - எனக்கு கல்யாணம் நடந்த பத்தாவது நாள்தான் தெரியும். முன்னாடியே தெரிஞ் சிருந்தா... கல்யாணத்தை தவிர்த்திருக்கலாம்... உண்மை தைலாவுக்கும் அவளோட அப்பா அம்மாவுக்கும் தெரிஞ்சா... அவங்க கோர்ட் வரைக்கும் போய் - விவகாரத்தை பேப்பர்ல பத்தி - பத்தியா வரும்படியா பண்ணிடுவாங்கன்னு நினைச் சேன்... கசப்பை நானே விழுங்கி ஜீரணம் பண்ணிட்டிருந்த நேரத்துல தான்... ஆல்பர்ட்கிட்டேயிருந்து... என்னோட ஆபீஸ் அட்ரஸுக்கு ஒரு ரெஜிஸ்ட்டர்ட் லெட்டர் வந்தது.''

''ஆல்பர்ட்டா...?''

''ஆமா... ரெஜினாவோட அண்ணன்...'' - சொன்ன அமுத குமார் தன் சட்டைப்பையில் நான்காய் மடித்து வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்து நீட்ட - ராகவமூர்த்தி அதை கைநடுக் கமாய் வாங்கிப் பிரித்தார். பார்வை வரிகளின் மேல் தாவியது.

**அன்பான அமுதகுமார் அவர்களுக்கு,**

**உங்களிடம் 'பாவமன்னிப்பு' பெற விரும்பும் ஆல்பர்ட் எழுதிக் கொண்ட கடிதம். உணர்ச்சி வேகத்தில் ஒரு தப்பைச் செய்துவிட்டு - அனுதினமும் நெருப்பை - விழுங்கிவிட்ட அவஸ்தையில் இருக்கும் நான் - உங்கள் முன் முழந்தாளிட்டு - கைகூப்பி உட்கார்ந்து பேசுகிறேன். என் மனதிற்குள் கனன்று கொண்டிருக்கும் உண்மையை - என்னால் மறைத்து வைக்கவும் முடியும். ஆனால் நான் மறைத்து வைக்க விரும்பவில்லை. நான் அறியாமல் செய்துவிட்ட தவறுக்காக - உங்களிடம் பாவமன்னிப்பு பெறுவதே என் நோக்கம் என்பதால் இந்தக் கடிதம். அந்தக் கசப்பான உண்மைக்கு வரு கிறேன்.**



**அந்த மழை பெய்த நாளில் - என் தங்கைக்கு அழைப்பு கொடுக்க வந்த - தைலா மின்சார அதிர்ச் சிக்கு ஆளாகி - மழைநீரில் மயங்கி விழுந்ததும் - அவளை வீட்டிற்குள் எடுத்துச் சென்று - முதலுதவி கொடுத்தேன். ஒரு மனிதனாய் முதலுதவி கொடுக்க ஆரம்பித்த நான் - எப்படி மிருகமாய் மாறினேன் என் பதே எனக்குத் தெரியவில்லை. ஆழமான மயக்கத்தில் இருந்த தைலாவிடம் தப்பாய் நடந்து கொண்ட அந்த சில நிமிஷங்களுக்காக - என்னை நானே எப்படி தண்டித்துக் கொள்வது என்பது எனக்குத் தெரிய வில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நான் எந்தப் பெண்ணுக்குமே ஒரு உண்மையான கணவனாய் இருக்க முடியாது. நான் நீசன், கயவன், அயோக்கியன், சாக்கடையில் நெளியும் புழுவைக் காட்டிலும் - கீழானவன். நான் செய்த தப்புக்கு ஒரு சர்ச்சுக்கு போய் - சுலபமாய் கன்ஃபெஷன் என்கிற பாவமன்னிப்பை வாங்கிக் கொண்டு - புனிதனாகி விட எனக்கு சம்மதமில்லை. தைலாவுக்கு தாலி கட்டிய உங்களிடம் பாவமன்னிப்பு பெறவே விரும்புகிறேன். நான் செய்த தவறுக்காக - தைலாவை நீங்கள் தண்டிக்க மாட்டீர்கள் என்கிற நம்பிக்கை எனக்குண்டு. நீங்கள் என்னை மன்னித்து விட்டீர்கள் என்றால் - உண்மைகள் உங்களிடமே இருக்கட்டும்.**

**இப்படிக்கு...,**
**பாவமன்னிப்பைப் பெற்றுவிட்டதாக**
**நம்பும் ஆல்பர்ட்.**

கடிதத்தைப் படித்து முடித்த ராகவமூர்த்தி - நிசப்தமாய் தலைநிமிர்ந்தார். அவரையே பார்த்துக் கொண்டிருந்த - அமுதகுமார் புன்னகைத்தான்.

''தைலாவோட வயித்துல வளர்ற குழந்தைக்கு 'யார் அப்பா'ங்கிற உண்மை இப்போ உங்களுக்கு புரிஞ்சிருக்கும். என்னைப் பொறுத்த வரைக்கும் இது ஒரு ஆக்ஸிடெண்ட். தைலாவோட கற்பு கறைபட்டுப் போச்சுன்னோ... அவ சோரம் போய்ட்டாள்னோ நான் நினைக்கலே... உங்களுக்கும் சரி... நம்ம டாக்டர் தம்பதிகளுக்கும் சரி... இந்த விஷயம் அதிர்ச்சியா இருக்காதுன்னு நினைக்கிறேன். ஏன்னா.. உங்களோட திட்டமே தைலாவுக்கு... செயற்கை முறையில் கருத் தரிக்க வைக்கிறது தானே...?''

''அமுதம்! உனக்கு இந்த உண்மையெல்லாம்...?''

''நீங்க வீட்ல இருக்கும் போது - பேசிக்கிட்டதை கேட்டுத் தான் தெரிஞ்சுகிட்டேன். நான் தெரிஞ்சுகிட்டதை வெளியே காட்டக்கூடாதுன்னுதான் நினைச்சிட்டிருந்தேன். ஆனா நாளுக்கு நாள் நீங்களும் டாக்டர் தம்பதிகளும் - தைலாவோட கர்ப்பத்துக்கு யார் காரணம்னு தெரியாமே அவளை - மோசமா நினைக்கிறதை என்னால பொறுத்துக்க.. முடியலை.. அவ தப்பானவ இல்லைன்னு தெரியப்படுத்தறதுக்காகத் தான்... டாக்டரையும் உங்களையும் கூப்பிட்டேன். அதுவுமில்லாமே...'' - பேச்சை சில விநாடிகள் நிறுத்தி விட்டுத் தொடர்ந்தான் அமுதகுமார்.

''ஆபீஸ்ல... எனக்கு இண்டர்நேஷனல் அளவில் ப்ரமோஷன் குடுக்கப் போறாங்க... அநேகமாய் சிங்கப்பூர்ல இருக்கற எங்க ஹெட் ஆபீசுக்கு - என்னை அனுப்பப் போறாங்க.... விருப்பப்பட்டா குடும்பத்தோடு அங்கேயே செட்டில் ஆயிடலாம். தைலாவுக்கு குழந்தை பிறந்ததும் - குழந்தையையும் அவளையும் கூட்டிகிட்டு சிங்கப்பூர் போயிடலாம்ன்னு இருக்கேன்...''



''அ...மு...து...'' தேவகியின் கண்களில் நீர் கட்டிக் கொண்டது.

''அட! ஏம்மா அழறே...? ஒரு பொண்ணை என்னால தாயாக்க - முடியாது. ஆனா ஒரு குழந்தைக்கு நல்ல அப்பாவாக இருக்க என்னால முடியும். தைலா என்னோட மனைவி. அவ வயித்துல வளர்ந்த குழந்தை என்னோட குழந்தை...''

டாக்டர் வீரபாகு அமுதகுமாரின் கைகளை நெகிழ்ச்சியாய்ப் பற்றிக் கொண்டார். ''அமுதகுமார்! ஒரு பெண் தெரியாமே கெட்டுப் போயிட்டாக்கூட இந்த சமூகம் அவளை ஏத்துக்கிறதில்லை... அவளை ஒரு கறைபட்ட பெண்ணாவே பார்க்கும். ஆனா... நீ... அந்தக் கறையை சுலபமா எடுத்துகிட்டே... ரியலி யூ... ஆர்...''

''கிரேட் கிடையாது டாக்டர்... ஒரு பெண்ணோட மனசைப் புரிஞ்சுகிட்ட ஒரு மனுஷன்... அவ்வளவு தான்...''

ராகவமூர்த்தி ஏதோ பேச முயல -

வெயிட்டர் அருகே வந்து நின்றான்.

''ஸார்... ஆர்டர் ப்ளீஸ்...''

''புதுசா போட்ட ஸ்வீட் என்ன இருக்கு...?''

''பால் அல்வா...''

''நாலு ப்ளேட்...'' -என்றான் அமுதகுமார்.